“ எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்பதறிவு ”

MAR 1906
MADRAS

பூலோகவியாசன்.

பிரதி மாதமும் பிரசுரஞ் செய்யப்படும்.

தொகுதி 3.] சென்னை 1906௵ ஜனவரி௴ 12௳ [பகுதி 4.

“ வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில ”

திருக்குறள் அடக்கமுடைமை.

மனம் வாக்கு காயமிவைகள் கெட்டவழிகளிற் செல்லாது அடங்குதல் என்பது இவ்வதிகாரத்தின் பொருளாகும்—இஃது நடுவு நிலைமையின் பின் அமைக்கப்பட்டதற்கு காரணமென்னையோவெனில் நடுவு நிலைமையுடையோன் அந்நியர் குற்றத்தைப் பார்ப்பதுபோல் தன் குற்றத்தையும் பார்ப்பவனாகையால், அவ்வாறு பார்ப்பதற்கு, அடக்கம் அவசியமாகையால் இஃது இங்கமைக்கப்பட்டது. அடக்கத்தின் சிறப்பையுணர்த்த நாயனார்.

“ அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும். ” என்றார். மோட்சம் நரக மென்பதைப்பற்றி சமயவாதிகள் வெவ்வேறு பொருள் கொள்கின்றபடியால், அதனை நீக்கி சொல்லும்பட்சத்தில், அடக்கமுடையவர்களெல்லாம் சதா இன்பமனுபவிப்பார்களென்றும் அஃதில்லார் துன்பமனுபவிப்பார்களென்பதும் இக்குறளின் பொருளாகும். அடக்கமுடையாரை துன்ப மணுகாதென்பதனை நாலடியார்

“ அறிவ தறிந்தடங்கி யஞ்சுவ தஞ்சி
யுறுவ துலகுவப்பச் செய்து—பெறுவதனா
லின்புற்று வாகு மியல்பினா ரெஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்த லரிது. ” என்பதனால் நன்கறியலாம். இக்குறளில் உய்த்துவிடும் என்று மிகவும் துணிபாய்க்கூறியிருக்கின்றார். ஆகவே அடக்கமுடையார் இன்புறுவதும் மற்றோர் துன்புறுவதும் துணிபாகும். இன்னும் அடக்கமுடைமையின் சிறப்பைக்காட்ட

“ காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதனினூஉங் கில்லை யுயிர்க்கு. ” என்றார். இதில் மக்கட்குச் செல்வம் அடக்கமுடைமையே அதைவிட உயர்ந்த செல்வம் வேறில்லை. ஏனெனில் இதர செல்வங்களாற் றுன்பம் நேரும். இதனை “ ஈட்டலுந் துன்பமற் றீட்டிய வொண்பொருளை, காத்தலு மாங்கே கடுந்துன்பம்,—காத்தல், குறைபடிற் றுன்பம் கெடிற்றுன்பந் துன்பக், குறைபதி மற்றைப் பொருள் ” என்னும் நாலடியால் அறியலாம். ஆனல் பெருஞ் செல்வமாகிய அடக்கமு

டையினுல் துன்பம் ஒன்றும் அணுகாது இதனை இவ்வதிகார முதற் குறள் குறிப்புரையால் அறியலாம். ஆதலால் இன்பத்தையே தரும் அடக்கமுடைத்தாயிருத்தலை மக்கட் செல்வமாகக் காக்கக்கடவர் என்றார். அடக்கமாயுள்ளவர்களை உலகத்தார் மதிக்கிறதில்லை என்னும் தப்பு கொள்கையை மறுப்பான் வேண்டிநாயனுர்,

“ செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின். ” என்றார். நமக்குஅடக்கமேஅறிவாகுமென்பதனைக் கண்டு நல்வழியில் ஒருவன் நடப்பானேல் அவனது அடக்கத்திற்காக பெரியோர் அவனை மெச்சுவார்களென்பது இக் குறளின் தாற்பரியம். ஆகவேகீழ்மக்கள் ஓர்கால் அடக்கமுள்ளோனை அவமதித்தாலும் பெரியோர்கள் அவனை மேலாகக் கொள்ளுகின்றனர்; பெரியோர்களால் மேலானவனெனப் பெயரெடுப்பது கீழ்மக்களால் மெச்சப்படா திருத்தலைப் பார்க்கினும் எவ்வளவோ மேன்மையென அறிக. இதனை மற்றவர்கள் கூற்றுன் நன்கறியலாம். இங்கு அறிவறிந்து என்பது கவனிக்கத்தக்கது. ஏனெனில் கற்றவர்களெல்லாம் அறிந்தது என்னவென்றால் அடக்கமே யன்றிவேறல்ல இதனை “ கல்விக் கழகு கற்றுணர்ந் தடங்கல் ” எனபதாலும் கற்றறிவார்கண்ட தடக்க மடங்காதார் பொச்சாந்தும் தம்மைப் புகழ்ந்துரைப்பர் தெற்ற......நிறை குளம் நீர்தளும்பலில்” என்பதாலும் நன்கறியலாம். பின்னும் அடக்கத்தின் சிறப்பையே வற்புறுத்த

“ நிலையிற் றிரியா தடங்கியான் றோற்ற
மலையினு மாணப் பெரிது ” என்றார். இல்வாழ்வான் தன்நிலையிலேயே நின்று அடங்கியிருப்பானேல் அவன் வரையில்லா மேன்மையையடைவனென்பது பொருள். இக்குறளில் நிலைபிற்றிரியாது அடங்குதல் என்பது இல்வாழ்வான் என்பான் தன்னைம் பொறிகளாலும் சுவை முதலாகிய ஐம்புலன்களையும் கிரகஸ்தா சிரமத்திருந்தே நுகர்ந்தும் மனம் வாக்கு காயமிவைகளைத் தன்வயப்படுத்தி அடங்குதல் என்பதே, “ பொருளில்லார்க் கிவ்வுலகமில் ” என்னும் வாக்யப்படி பொருளில்லாதவர்க்குத் தான் சிறப்பில்லை. ஆகையால் பொருளுள்ளவர்கட்கு அடக்க மவசியமில்லையென்னும் கீழ்மக்களாம் செல்வரின் பொருளிலாக்கொள்கையை மறுக்க நாயனார் “ எல்லார்க்கு நன்றும் பணித லவருள்ளும் செல்வர்க்கே செல்வந் தகைத்து ” என்றார். அடக்கம் எல்லார்க்கும் பொதுவாக மேன்மையைக் கொடுப்பதென்றாலும் செல்வர்க்கு அஃதுளதேல் இரண்டாவது குறளில் கூறியபடி அச்செல்வர்க்கு இருக்கும் செல்வத்தோடு இஃதும் ஓர் 'செல்வமாகச் சருதப்படும் என்பதாம் ஏனெனில் செல்வரில் அநேகரிடத்து செருக்குளதாகையாலும் அச்செருக்கை யறுத்து அடக்கங் கொண்டிருத்தல் செருக்குக்குக் காரணமாயுள்ள செல்வமுதலியன இல்லாதவரது அடக்கத்தினும் மேலானது எனக்காட்டினர். இதுவரையில் அடக்கத்தின் சிறப்பைக் காட்டி பிறகுகாயத்தினடக்கஞ் சொல்ல

“ ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து ” என்றார். ஆமையானது தன்

கால்கள் நான்கையும் தலையையும் உள்ளிழுத்து அபாயத்திற்கு காத்துக்கொள்வதுபோல் ஒவ்வொருவரும் பஞ்சேந்திரியங்களையும் தீயவழியிற் போகாது அடக்கிக்கொள்ளுவரேல் அவர்க்கு எழுபிறப்பினும் நன்மை உண்டாகும் என்பதே இக்குறளி னர்த்தமாகும். இக்கருத்தையே ஸ்ரீ. கிருஷ்ண பகவானும் அர்ச்சுனனுக்கு போதித்திருக்கிறார். பகவத்கீதை,

" யதா ஸம்ஹரதே சாயம் கூர்மோங்கானீவ ஸர்வசஃ, இந்திரி யாணீந்த்ரியார். தேப்ய, ஸ்தஸ்ய ப்ரக்ஞா ப்ரதிஷ்டிதா " என்கிறது. இப்படிக் கில்லாது எவன் ஐம்பொறிகளையும் தீயவழிகளிற் செலுத்தி தன் ஆயுளைவீணிற் கழிக்கின்றானோ அவன் சுழன்றுவரும் ஜனனமரணத் திடைபட்டுஆயுள்நாள் பரியந்தம் துன்பம் அனுபவிப்பதோடு தக்கவராலும் கொண்டாடப்படமாட்டானென்பது திண்ணம். இஃதறியா சில ஆண்களும் பெண்களும் தங்கள்சுகத்தைப் பிறர்க்கு விற்று அதனால் க்ஷணமும நில்லா சுகத்தை அனுபவிக்கிறதாக நினைக்கிறார்கள். ஆண்கள் கொலை, களவு, பொய், சூது, ஆகிய இவைகளோடு தன் நாயகி இலக்குமியைப்போ லிருக்க அவளோடு இல்லறம் நடத்தாது பரஸ்திரீக மனமே பெரிதாகக்கொண்டு பலத்தையும் சுகத்தையும் ஆயுளையும் மோட்ச சாம்ராச்சியத்தையு மிழந்து விடுகிறார்கள். பெண்களோவென்றால் நாணம் அச்சம் மடம் பயிர்ப்பு முதலிய விட்டு, சுவாதீனந் தேடியலைகின்றனர். பெண்களுக்கு சுவாதீன மிருக்கப்படாது என்பது நமதுகருத்தல்ல. சுவாதீனம் என்றால் சில பெண்கள் என்ன நினைக்கிறார்க ளென்றால், மடம், நாணம் அச்சம், பயிர்ப்பு இவைகளை விட்டுவிடுத லென்றும், தன் நாயகனல்லாத மற்றோர் மெய் தம்மேற்பட கூசாமல் அங்கீகரிப்பதோடு அதில் சந்தோஷம் கொண்டாடுவதும், ஆண்களைவிட தாம் உயர்ந்திருக்க வேண்டுமெண்ணத்தோடு ஆண்களெல்லாம் தங்கட்கு கீழ்பட்டவர்க ளென்னும் அகங்காரம் கொண்டிருப்பதுமே சுவாதீனம் எனநினைக்கின்றார்கள். இதுதானோ சுவாதீனம் இதை எந்நேயர் விளக்குவார்களாக.- மடம், நாணம், அச்சம், பயிர்ப்பு என்னுமிவைகளின் உண்மை யாம் பொருள் தெரியாது பெண்களுக்கு இக்குணங்க ளமைத்த பெரியவர்களை இகழ்வார் எத்தனையோ பெண்கள்! அந்தோ! பரிதாபம் - இன்னும் சில ஸ்திரீ மணிகள் ஆண்கள் அந்நிய ஸ்திரீகளைத் தேடிச் செல்வதால் பெண்களாகிய நாங்கள் ஏன் பரபுருஷரைத்தேடப்படாது என்று நியாயங் காட்டுகின்றனர். இஃது என்ன நியாயமோ குரு திருடி பொய் சொல்லி இழிவாக ஜீவித்தானென்றால் சிஷனாகிய நானும் ஏன் அப்படி ஜீவிக்கப்படாது என்பதைப்போ லிருக்கிறது. குருவுக்குவரும் மானக்கேடு தனக்கும் வர இஷ்டப்படும் சிஷன் எவன்? பரஸ்திரீ கமனஞ் செய்யும் ஆண்கள் அனுபவிக்கும் துக்கம் தங்களுக்கும் நேர இஷ்டப்படும் பெண்மணியு முளரோ? உய்த்துணர்க - விரியுமென நிறுத்தினோம். இன்னும் அடக்கமுடைமை யற்றவனெனக் காட்டுவதில் நா முதன்மை யாகையால் அஃதினடக்கம் மேலான தென்றும் அதனை யடக்காதவர்கள் துன்பத்துட்படுவார்களென்பதையும் வற்புறுத்த

" யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு " என்றார். தன்நாவைக்

காக்காது பெருமை பேசியவர்கள் துன்ப மனுபவித்தார்க ளென்பதற்கு அநேக திருஷ்டாந்தங்கள் சரித்திர பூர்வமாகவும் உண்டு. நேயர் தெரிந்து கொள்வர். "ஔவியம் பேசேல்" என்னும் நமது கிழவியின் வாசகத்திற் பேசேல் என்பது தகுந்ததும் மெச்சற்பா லதுமன்றோ! தன் நாவை யடக்காது பிறர்க்கு கெடுதி விளைக்க வேண்டு மென்னும் எண்ணத்தோடு தீய சொல் முதலியன சொல்வோர் அத்தீய சொல்லால் தங்கள் நன்மையையும் கெடுத்துக் கொள்ளுகிறார்கள் ஆகலின் எச்சரிக்கை என்று

"ஒன்றானுந் தீச்சொற் பொருட்பயனுண் டாயி
னன்றாகா தாகி விடும்" என்பதால் அறிவிக்கின்றார். ஒருவர்க்கு நல்லதோர் கருமங் கைகூட, தான் தீயசொற்களைச் சொன்னாலும் அஃது சொன்னவனுக்கு தீங்கையே யுண்டாக்கும் என்னு இக்குறளுக்கு வேறொரு பொருள் சொல்வாருமுளர். எது எப்படியாயினு மாகுக - தீய சொல்லின் பயன்சொன்னவனுக்கு தீமையே கொடுக்கும் என்பது மறுக்கக் கூடாததாகையால் எத்தகையதாயினும் தீச்சொல் ஒழிக்கவேண்டு மென்பதே - இன்னும் வாக்கடக்க மவசியமென

"தீயினாற் சுட்டபுண் ணுள்ளாறு மாறாதே
நாவினாற் சுட்ட வடு" என்றார். மேற்சொல்லிய தீச்சொல் நெருப்பினும் கொடிதாகையால் ஓம்பற்க என்றார். சுடுந்தன்மையில் இரண்டு மொக்குமென்றாலும் தீயினாலுண்டானது ஆறிப்போகக் கூடிய தென்றும் தீச் சொல்லா லுண்டானது ஆறக்கூடியதல்லவென்றும் காட்ட புண்என்றும் வடு என்றும் சொன்னார் போலும். கடைசியாக மனவடக்க மவசிய மென்பதையும் அஃதின் பெருமையு முணர்த்துவான் வேண்டி

"கதங்காத்து கற்றடங்க லாற்றுவான் செவ்வி
யறம்பார்க்கு மாற்றி னுழைந்து" என்றார். இக்குறளை சற்றூன்றி பார்த்தால் கோபமுள்ளபோது கல்வியழியுமென்பதும், கல்வியழிந்தால் அடக்கமழியுமென்பதை அடக்கமழியின் தர்மம் அழியுமென்பதும்விளங்குகின்றது. ஒருவன் வெளிக்கு அடக்கமுடையவனாகக் காணப்பட்டபோதிலும் மனதில்அடக்கமற்றவனா யிருக்கக்கூடும். ஆனால் மனத்தில் அடக்க முள்ளவன் வெளிக்கு அடக்கமற்றவனாயிருப்ப னென்பது கூடாமை ஏனெனில் மனதே எல்லாவற்றிற்கும் காரணமாகலின், ஆகவே மனவடக்கமே மற்றஅடக்கங்களை விடமேலானதென அறிந்து அடங்குவர் பெரியோர். மற்றவர் தம்மை மதிக்கவேண்டுமென்னும் எண்ணத்தோடு அடங்கி யிருப்பதாக பாவிப்பாரும் சிலர். இதனை கூட்டங்களில் அவையடக்கமாகச் சொல்லும் வித்வான்களில் சிலரிடத்தில் காணலாம்.

இது விஷயமாக எமது அனுபவமொன் றுளது. ஒரு தமிழ் வித்வான் ஓர் சத்கால க்ஷேபத்திற்குப்போய் பேசநேர்ந்தபோது வழக்கமாக அவையடக்கஞ் சொன்னார் சொல்லும்போது தன்னை பேசத்தெரியாதசிறுபிள்ளையென்றும், மூட சிகாமணியென்றும் தன்னை மிகவுந் தாழ்த்தியும், வந்திருந்தவர்களைக் கல்வி களஞ்சியங்க ளென்றும் மேன்மக்க ளென்றும் அவர்களை

மிகவும் உயர்த்தியும் ஏறக்குறைய $\frac{3}{4}$-மணி நேரம் அவையடக்கம் பேசினார். எல்லாம் முடிந்த பிறகு அவரிடம் தனியே பேசிக்கொண்டிருக்க நேர்ந்த போது அவர், வந்தவர்களெல்லாம் மூவனா (மூடர் என்பதுபொருள்) என்றும், ஆகவே அரிய விஷயங்களைச் சொல்ல இஷ்டமில்லாதிருந்ததென்றும் சொன்னார். அன்பரே இதுதானா அடக்கம்! அந்தோ பரிதாபம் - இவர் அவையடக்கத்தின் நோக்கமென்ன? இவர்களிடத்தில் தன்னைத் தாழ்த்திக் கொண்டால், இவ்வளவு வாசித்த இவரும் இப்படி தாழ்த்திக்கொண்டு பேசுகிறாரே இவரது அடக்கமே அடக்கம் என்று பிறர் சொல்லி தன்னைப் புகழ்வார்களென்பதே இவரது அவையடக்கத்தின் நோக்கமாக்கும்,

ஆகவே இவர்க்கு உள்ளது மெய் மன அடக்கமா; இதனைத்தான் ஆங்கிலேயத்தில் ".Humility with a hook" என்கிறார்கள். ஆகவே இப்படிக் கில்லாது உண்மையாம் மன அடக்கமுடையவராய் தர்ம வழியில் நடக்க வேண்டுகின்றோம்.

1. அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும்.

2. காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதனினூஉங் கில்லை யுயிர்க்கு.

3. செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின்.

4. நிலையிற் றிரியா தடங்கியான் றோற்றம்
மலையினு மாணப் பெரிது.

5. எல்லார்க்கும் நன்றாம் பணித லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.

6. ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து.

7. யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

8. ஒன்றானுந் தீச்சொற் பொருட்பய னுண்டாயி
னன்றாகா தாகி விடும்.

9. தீயினாற் சுட்டபு ணுள்ளாறு மாறாதே
நாவினாற் சுட்ட வடு.

10. கதங்காத்து கற்றடங்க லாற்றுவான் செவ்வி
யறம்பார்க்கு மாற்றி னுழைந்து.

கோ - பூ - சென்னை.

பெற்றோரைப் பேணல்

மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.

சர்வஜீவதயாபர சாகரமாயிராநின்ற நம்முன்னூர் கேள்வனின் குன்றாக்காருண்ணியத்தின் விளைவென ஜனித்தயாம், இப்பத்திய உலகத்தினிடை, இருபொருளாகிய ஆவியுங் காயமும் ஒன்றாய்க்கூடி வாழுமளவும், சாத்திர விதிப்படி பூர்த்திசெய்யவேண்டிய முறைமைகளுக் கெண்ணில்லை. அங்ஙனம் அம்முறைப்படி நடந்துக் கொள்வோமாகில், அவற்றாலெய்யுந் தகைமைக் களவில்லையென்பதும் வெளிச்சமே.

இம்மகிதலத்தில் நம்மை பிறப்பித்தவர் சர்வேஸ்வரனென்பதையாவருமெளிதில் அறிந்துள்ளார். எனினும் ஒவ்வொருசிருட்டிகட்கும், கர்த்தாவு கருவியுமாகிய இருபொருளு மத்தியாவசிய மென்பதையும் யாமறிந்துள்ளோம். ஆகையால் நம்மனோரின் சிருட்டியினிமித்தம் ஆதியாய் நின்ற கர்த்தாவும், கருவியும் யாவை? என்பதை முன்னர் ஆலோசிப்பாம்,

ஈண்டு கர்த்தன், நிருமலனாகிய கடவுளென்பதும்; கருவி தாய் தந்தையரென்பதும் ஸ்பஷ்டமே. ஆகலின் நம்மின் உற்பவத்திற்கு ஆதி மூலமாய் நின்ற அன்னோரை (கடவுள், தாய் தந்தையர்) யிடையறாது வந்தித்தல் பேரறிவாம். இவற்றுள் கடவுளைப் போற்றி வழிபடுத லனைவர்க்குச் சகஜமே. நிற்க, நாம் உடலுடன் கூடிவாழு மிச்சனனத்தில் கர்த்தாவாகிய கடவுள்நம் மறிவுக்கு எளிதாய் தோன்றாமல், கருவியாய் நின்ற, தாய் தந்தையர் மாத்திரமே யெளிதிற்றோன்றி யிருக்கின்றமையாலும், அன்னோர் நமக்குக் கருவியாய்நின்ற காரணத்தி னிமித்தம் நம்மை யாதரித்து வந்தமையாலும் அன்னோரை யெவற்றிற்கும் மேம்பட்டதாகக் கொண்டு போற்றல் வேண்டுமென்பதும், துரை. இதனை யோர்ந்தன்றோ தாயென்னுங் காரணப்பெயரை யணிந்த ஔவை பிராட்டியும். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வ" மென்றும் மீண்டும் "தந்தைதாய்ப் பேண்" என்னுங் கூறியுள்ளார்.

தாய் தந்தையரைப் போற்றி வழிபடுதல் இன்னவையென்றும், இவ்வாறென்று முணராத பாமரர்கள், தாய் தந்தையர்களின் முதிர்வயதில்கொஞ்சம் சாதம் போட்டுவிட்டால் மிக்கதென்று கருதி, யவ்வாறு பூர்த்திசெய்து வருவதால், தாங்கள் பெற்றோர்க்குப் புரிய வேண்டிய கடமைகள் யாவும் முற்று பெற்றதென மதித்துக் கொள்கின்றனர். ஆ! ஆ!! இது பேதமையன்றோ? ஆண்மகவைப் பெற எண்ணிலாத் தவமிழைத்த பெற்றோர்க்குச்செய்யவேண்டிய பிரதியுபகாரமும், நன்றியறிதலும் இம்மட்டுந்தானா? மீளவும் அன்னோர் தம் தவப்பயனால் நம்மைப் பெற்றதுடன் நம்மனோர்க்கு எத்துணையேனும் பிணி, பசிமுதலானவை யின்றி தங்களா லியன்ற மட்டும் நம்மைப் பாதுகாத்து வந்ததுடன், உலகாசார விதிகளைக் கல்வியின் வாயிலாக வூட்டி வளர்த்தும் அவ்வச்சமயங்களில் நம்மின் சேமலாபங்களைக் கோரியாலயதரிசன முதலானவைகளைக் குறைவற நிறைவேற்றி நம்மை யிந்நிலை யென்னும் நன்னிலையிலும் அமர்த்தி வைத்துளாரன்றோ? இவை யாவையுஞ் சற்றாராய்ந்து சிந்தித்து

" செய்யாமற் செய்த வுதவிக் குலக யகமும்

வானகமு மாற்ற லரிது. " என்பதற்கேற்க ஒரு கணமேனும் அத்தாய் தந்தையரைப் பராமுகஞ் செய்யாது எவற்றிற்கும் மேலாகக் கொண்டு, அன்னோர் அடியே நம்முடியென வந்தித்து அவர்தம்நெஞ்சகத்திகிஞ்சித்தும் சஞ்சலந் தோன்றவிடாது, எவ்விடயத்திலும் அவர்கட்குக் களிப்பூட்டி பாதுகாத்து அன்னோர் அன்புகூர்ந்து அளிக்கும் ஆசி பெற்றுய்தலே யுசிதமாம்.

வைத்தவ ருளமு வப்ப மலர்நிழல் கனியி யாத
வத்தருத் தன்னை வெட்டி யழலிடு மாபோ லீன்று
கைத்தலத் தேந்திக் காத்த காதற்றாய் பிதாவை யோம்பாப்
பித்தரை யத்தன் கொன்று பெருநர கழற்சேர்ப் பானே

பெற்றோர்க்குத் தங்கள் புத்ரமணிகளே பிற்காலத்து செல்வ மென்பதும் அச்செல்வத்துக்குச் சுயாதீனமுள்ளோர் அத்தாய் தந்தையரென்பதையும் முன்னிட்டன்றோ? " செல்வன் " என்னுங் காரணப் பெயரையும் மகனுக்குச் சூட்டப்பட்டுளது.

பெற்றோரைப் பேணாத புத்ரமணிகள் எத்துணைதான் கல்வியிலுஞ் செல்வத்திலும் சிறந்து சகலவித சன்மார்க்கங்களைக் குறைவற கடைப்பிடித்து நடப்பினும் அவையாவும் நீர்மே லெழுத்துபோல் நிலைபெறாது மறைந்து போவதுடன், அன்னோரின் சாபத்துக்காளாக்கியும் வைக்குமென்பதற்கையமுளதோ?

ஈன்ற தாயினை யீன்றெடுத் திருபுயத் தணைக்கும்
ஆன்ற தந்தையை யரந்தை செய்தகன்று போயடவி
தோன்றி மாதவந் தொடங்கினே ரிவர்களைத் தொல்லை
மூன்றுதேவரு முனிவுற நிரயமுற் றிழிவார்.

" தந்தை சொல்மிக்க மந்திர மில்லை " " தாய்சொற் றுறந்தால் வாசக மில்லை " என்னும் பண்டை மொழிக்கிணங்க அன்னோரின் சமயோசித நற்போதனைகளைச் சிரமேற்கொண்டு நம்மைக்கண்டவர் யாரும் நற்குமரரென்று ஆமோதித்துக் கூறவும், அதன் வாயிலாக,

" ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்

சான்றோ னெனக் கேட்டதாய். " என்னும் நாயனார் மொழியைச் சுயாதீனங் கொள்ளவும் வேண்டிய நற்கிரியையாதிகளைத் தக்க முறைமையுடன் பூர்த்திச்செய்து வருதலே நற்புதல்வர்களி னியல்பாம். இங்ஙனமின்றி அப்பெற்றோர்கள் முதிர் வயதால் மெய்தளர்ந்து வாடியகாலத்து, தங்களின் வறுமை முதலானவையினால் சற்றுசினந்து பேசின் அதைப் பிரமாதமாக வெண்ணி அவர்கள் மேல்வெகுண்டு கூறப்படாதவைகளைக் கூறியன்னோர் மனதை யெரியச்செய்து, சற்றேனும் விவேகமின்றி புடைத்து, இல்லத்து நாடவிடாது புறந்தள்ளுதல் சான்றன்று. ஈன்றெடுத்தபெற்றோரையாம் சேர்க்காவிடின் மற்று அவர்க்குத் துணைவேறுளதோ?

ஈன்றவர் நம்மா லுற்ற வெண்ணரு மிடர்கட்கான்ற
மூன்றுலகமு மொப்பாமோ மூப்பினு விளைப்பாலன்னார்
கான்றவன் சொற்கள் கன்னல் கான்றவன் பாகெனக்கொண்
டேன்றுகோ லென்னதாங்கி யூழியஞ் செய்யாய் நெஞ்சே.

என்பதற்கிணங்க, அன்னோர் நம்மைப்பெற்று வளர்ப்பதற்காகக் கொண்டகஷ்ட நஷ்டமுதலானவைகளை முன்னிட்டு அவர் தம் கடுஞ்சொற்களையுங் கற்கண்டென மதித்து, அவர்களாற் சேகரித்து வைக்கப்பட்ட செல்

னங்கட் கெவ்வளவு சுயாதீனமுடன் நியாயவாதஞ்செய்யத்துணிகின்றோமோ யவ்வாறு அன்னோரைப் பரிபாலித்து போற்றல்வேண்டும். காந்தை, மைத்துனர், மாமி, முதலானோரின் சகவாசத்தாலும், தற்போதனைகளாலும் நம்பெற்றோரை மறக்கலாகாதன்றோ? காந்தை, குமரர், மித்திரர், தமர்முதலானோரோடு சகல செல்வங்களை யிழக்கினும், தக்கமுயற்சியால் வேறுபெறக்கூடும். மேலும் ஒன்றுக்கதிகமாகவு மடையலாம். ஆனால் பெற்றோரை யிழப்பின் வேறு பெற்றோரை வனத்திடை யிருந்து தவமியற்றினும் பெறுதற் கரியதாகும். இங்ஙனம்பெறுதற்கரியபெற்றோரைத்தினேதினேபேணலத்யாவசியமே.

மனையவள் வீயின் வேறோர் மனைவியைக் கொளலாம்பெற்ற
தனையரா தியரிறப்பிற் றனித்தனி பெறலாம் பின்னும்
புனைபொரு ளீங்கின்மற்றோர் பொருளையும் பெறலாமத்த
னனையிறந் திடின்வேறத்த னனைவரு வாரோ நெஞ்சே.

நம்மலானமட்டும் பெற்றோரைப் பாதுகாக்காது வஞ்சனை புரிவோமாகில் வாழையடி வாழை யென்னும் ஆன்றோர் உரைப்படி நம் குமரர்களால் நாமும் பின்னர் வஞ்சிக்கப் படுவோ மென்றுரைப்பதற்கும் ஐயமுளதோ? இதனை நிரூபிப்பான் இவணொரு சிறியகதையைத் தீட்டுவாம்.

சர்வபோகமும் நிறைந்து கீர்த்திப் பெற்றிராநின்ற தென்னாட்டிடை ஓர் சிற்றூரில் விருத்தாப்பியமான தந்தை யொருவர் தன் தனையனு லாதரிக்கப் பெற்று வந்தார். அத்தனுசன் "உள்ள மெரிய உதடுபழஞ் சொரிய" வென்பதைப்போல் ஊர்மெச்சுவதற்காகத் தன் பிதாவை யாதரித்து வந்தாரேயன்றி யுண்மையில் பற்றுற்றவரா யிருந்தனரன்று. இவ்வத்தனுக்குமூன்றுங் காலே செங்கோலாகவும், தெருத்திண்ணையே பீடமாகவுந் தந்து, தகுந்த ஆடையின்றி வாடையில் மெலிந்து கோடையில் மெய்யுலர்ந்து வருந்தவும் விட்டு, ஓட்டைப்பாத்திரத்தி லன்னமிட்டுவந்தனர். இவ்விருத்தரான தாதை தன் எளிய நிலைமையை முறையிட்டுரைக்க வேறொருவரையுங் காணாது தன்னுள்வாடி யிருந்தனர். இங்ஙனம் நிறைவேறிவரும் நாளில் தன் சுதனுக்குக் கான்முளையாக வுதித்ததன் பௌத்திரனின் வாயிலாக வேனுஞ் சற்று சுகமுறலாமெனக் கருதியப் பேரனையருகே யழைத்து, ஆசைக்குரிய அன்புவார்த்தைகட்கூறி, பிள்ளாய்! உன்னையுன் தந்தையிஞ்ஞான்று எங்ஙனம் போற்றிவளர்க்கின்றனரோ அங்ஙனமே யானும் என் புத்திரனாகிய உன் தந்தையை வளர்த்து வந்தனன். ஆனால் அவையாவையும் மறந்தாற்போல வென்னையிவ்வறுமையில் வைத்து ஓட்டைப் பாத்திரத்தில் சாதமிட்டுண்ண வைத்திருக்கின்றார்; இதிலிருந்து மீளும் விதமெங்ஙனே வறிகிலேனென்றுமுறையிட்டுக்கொண்டு, ஒருசிறியதந்திர யுக்தியுளது, அதனை நிறைவேற்றின் சேமமுண்டென் றுரைத்தனர். இதனைக்கேட்ட அப்பேரனும் மனம் வாடினவனாய் அவ்யுக்தியாதென்று வினவ முன்றுளதை கூறலாயினர்.

இன்றிரவு போசன வேளையில் யானென் ஓட்டைப்பாத்திரத்தைச் சாதத்துக்காகக்கொண்டு வந்து கொடுக்கும்போது அப்பாத்திரத்தை யசாக்கிரதையாய்ப் பிடித்தாற்போல் கீழேவிட்டு விடுகின்றேன் அப்படி விட்டவுடன் அவ்வோட்டைப் பாத்திர முடைந்து போகுமன்றோ? அத்தருணத்தில் நீ யென்னை நோக்கி "ஓய் தாதா! நீர் என் அவ் வோட்டைப் பாத்திரத்தை யுடைத்துவிட்டீர் அதைப்பின்னர், என் தந்தைக்கு, அவரும்மை நடத்தும் முறைபடியானவருக்குக் கொடுத்து நடத்துவிக்கலா மென்றுன்னி யிருந்தேனென்று சொல்லிமுறையிட்டு, என்மேற் சினந்தாற்போல் பேசின் அதனாலெனக்கு நன்மை விளையுமென்றனர்.

இதனை மிக்க ஆர்வத்துடன் கேட்டிருந்த வப்பௌத்திரனு மதன் கருத்தை யுணர்ந்தவனாக அங்ஙனே யாகுகவென நன்வாக்களித்தனன். ஷெசம்மதத்துக் கிணங்க இராத்திரிப் போழ்தில் இவ்விருத்தர் தன் ஒட்டைப்பாத்திரத்தைக்கரங்கொண்டு சாதம்பெற வீட்டினுட்செல்ல பாத்திரத்தில்அன்னமிட தன்மருகிகைநீட்ட வித்தாதை யப்பாத்திரத்தைக்கைநழுவவிட்டு வாளாயிருந்தனன். அப்பாத்திரமும்கீழேவிழுந்த கணத்தில் சுக்கலாகப்போய்விட்டது. உடனே யதனைக் காரணமாகப் பார்த்திருந்த பேரன் தன் பாட்டனைநோக்கிச் சற்றுவெகுண்டவனாய் "ஓய் தாதா! என்ன நீர் அப்பாத்திரத்தைச் சுக்கலாக்கி விட்டீர்? அதனை நமக்குப் பின்னர் என்னப்பனுக்குத் தன் விருத்தாப்பிய காலத்தளிக்கலாமென் றோர்ந்திருந்தனன்; என்னெண்ணம் மாறிவிட்டதே" யெனக் கூவினன். இதனை நோக்கி யிருந்த மைந்தனின் மனந்திடுக்கிட்டு "வாழையடி வாழையே" வென வுள்ளினைந்து "முற்பகற் செய்யின் பிற்பகல் விளையு" மாப்போல் தன் குற்றந் தன்னையே பின்னர் கெடுக்குமெனத் தேர்ந்து அன்றைய நாளிலிருந்து தன் தாதையின் தேகவியோக மளவுந் தக்க விதமா யுபசரித்து, பின்னர் செய்ய வேண்டியவை யாவற்றையுஞ் சரிவர முடித்துத் தூற்றினோர் யாவரும் போற்றும் வண்ணமாய் நடந்துகொண்டனர்.

மேல் வரைந்துள்ள சரிதையை யுணர்ந்தேனும் பிள்ளைகடம்பெற்றோரைச் சாலமேம்பாடுட னாதரித்து வருவரென்ப தெமது துணிபு. மீண்டும் யாம் நம்மின்பெற்றோர்க் கெத்துணைத்தான் பேருபகாரஞ் செய்யினு மவர் நமக்குக் காலத்துக் கிசைந்தவாறு புரிந்த சிறிய நன்றிக்குமிணையிராது. இதனைநோக்கியே

'ஈன்றுவளர்த்த தாய்தந்தைக் கெவரேகைம்மா றியற்றிடுவார்
ஆன்றமதலை நூறுவயதளவு மடிமைத் திறம்பூண்டு
மூன்று புவனத்துள்ள பொருண்முற்று மளித்துமுறைமுறையே
ஏன்றுவழிபா டியற்றிடினு மொருநாள்வளர்த்தற் கிணையாதே.

என்றும் ஆன்றோர் கூறியுளார்.

இதனை மெய்ப்பிக்க ஈண்டு ஒரு சிறிய காதையைக் கூறுவாம்.

செந்தமிழ் நாட்டின்கண் ஒருகிராமத்தில் இருசுடர்போன்ற புருடனும் பாரியுமில்வாழ்க்கையை நடத்திவரும் நாளில் தக்க பருவத்தில் ஒரு மகவையேனும் பெறாது மனம்நைந்து அளவிறந்த தவமியற்றி வந்தனர். கடைசியாக கணவனுக்குச் சதுரிருபானாண்டு (80) வயதும், காந்தைக்குத் திரியிருபானாண்டு (60) வயது மானகாலத்து இன்னோர் தவமே யுருகொண்டாற்போல ஒரு ஆண்மகவை யீன்றனர். அவர்க் கான்முளையை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய்ப் பாதுகாத்தும்,

தந்தைமகற் காற்றுநன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

என்னும் செந்நாப் புலவரின் மொழிப்படி சர்வகலையூட்டி யாதரித்து வந்தனர். இதுகாறும் புத்திரனுக்கு இருபானாண்டாயிற்று. அப்போது தந்தைக்கு நூறாண்டும் தாய்க்கு எண்பதாண்டும் வயதாயிற்று. இங்ஙனம் நிறைவேறி வருங்காலத்துப் பெற்றோர்க்குக் காசிமுதலிய திருப்பதிகளின் தரிசனங்காண ஆர்வமொன் றுள்ளத்திலுதிக்கலாயிற்று; அதனைத் தம்மின் தவச்செல்வனிடஞ் செப்ப, வப்புத்

திரமணியு மங்ஙனே யாகுகவெனப் பிரயாணத்துக்கு நாட்குறித்துவைத்து, இதற்கு முன்னதாக வேண்டியவை யாவையுஞ் சேகரஞ்செய்துக்கொண்டு பிரயாணத்துக்குச் சித்தமாயினன், பெற்றோரும் உடன்பட்டனர். சின்னூற்றாண்டுக்கு முன்னர் இருப்புப்பாதை முதலானவை யில்லாதிருந்தமையால் இரண்டு கூடைகள் கட்டிய காவடி யொன்று கொணர்ந்து ஒரு கூடையில் பெற்றோரையுட்காரவைத்து மற்றொருகூடையில் பிரயாணத்துக்குவேண்டிய ஆற்றுணா முதலியவைகளை வைத்து காவடியை தன்தோண்மேற்சுமந்து சென்றனன். அங்ஙனஞ் செல்லு மார்க்கங்களில் மலை, மேடு, முட்பாதை முதலியவைகளைக் கடக்கவேண்டி யிருந்ததா லாங்காங்கு காவடியைச் சற்றிரக்கிவைத்திளைப்பாறி மறுபடியுங்காவடியைச் சுமந்துக்கொண்டு செல்வானாயினன். மீண்டும் துட்டவிலங்கினங்களால் வரும் பிராணாவஸ்தைகளுக்குந் தப்பித்துக்கொண்டு கடைசியாக தரிசிக்கவேண்டிய சேத்திரங்களைக் கண்குளிரக்கண்டு தோத்தரித் தகமகிழ்ந்த பின்னர் தம்மில்லுக்குத் திரும்பிவந்தனர். புத்திரன் பெற்றோருக்குச் செய்யவேண்டிய பேருபகாரத்தைப் பூர்த்திசெய்து விட்டேனென தன்னுள் நினைந்து அவர்களிருவரின் கஞ்சதாட்குச் சரண்புரிந்து கூறுவானாயினன்.

என்னரிய தாய்தந்தையரே! நும்மின் தவப்பயனாக வுதித்த யானுமக்குச் செய்யவேண்டிய பிரதியுபகாரமனைத்தும் இவ்யாத்திரியைப் பூர்த்திசெய்வித்ததால் நிறைவேறிற்றென சிந்திக்கின்றனன். ஆனால் தங்கள் திருவுளமெங்ஙனோ வறிகிலே னென்றனன். இதனைக் கேட்டதாய் மறுமொழியாக என்னரிய மகனே! நீ எங்கள் யாத்திரையி னிமித்த மநந்தங் கஷ்டங்களைச் சமாதானத்துடன் சகித்திருக்கலாம் எனினும், யானுமக்குச் செய்த உபகாரத்தை யொத்திட்டுப் பார்க்குமளவில் ஒரு விரனொடிக்கேனு மிணையிராதென்றனள். இதைக்கேட்ட புத்திரன் மனம்வாடியிருக்க அவனைத்தேற்றி, யத்தாய் மீண்டுஞ் சொல்வாளாயினள். என் புத்ரமணியே! யாம் யாத்திரைக்குப் போய்த் திரும்பினதெல்லாம் சுமார் மூன்றுமாதக் காலத்துக்குள் முடிந்திருக்கலாம்; இம் மூன்றுமாதத்திற்கு ளெம்மை நீ சுமந்து போகும்போது எத்தனையோ விடங்களில் கூடையுடன் கீழே வைத்துவிட்டு இளைப்பாறி யிருக்கலாம். ஆனால் யானுன்னைப் பத்துமாதம் என்கருவிற்றங்கியிருந்த காலத்து எவ்விடயத்திலாவ துன்னைக் கீழேவிட் டிளைப்பாறியிருப்பேனோ இல்லையல்லவா; ஆனதாற்றான் உன் கஷ்டத்தை சொற்பமாகக் கூறினனென்றனள்.

நேயர்காள்! யாம் பெற்றோர்க்குச் செய்யவேண்டிய பிரதியுபகாரங்களுக் களவில்லை. யாதலால் அன்னோரைச் சதாபூசித்து நம்மாலியன்றமட்டுமுபசரித்து அன்னோரின் ஆசிப்பெறுவதுடன் உலகத்தவரும் போற்றும்படியான சீர்த்திப்பெற் றுய்வோமாக. சுபம்.

த. தாமஸ்.

சித்தாந்தப்பிரகாசம்.

(56-ம் பக்கத் தொடர்ச்சி.)

அராகதத்துவமானது ஆன்மாக்கள் தங்களுடைய கன்மத்துக் கீடாகப் பெற்றதிலே ஆசையை மிருவிக்கும். நியதியானது அரசராற் கற்பிக்கப்பட்ட ஆணையானது யாதொரு தொழிலைச் செய்தவரை அத்தொழிற்கேற்ற பயன்களைப் புசிப்பிக்கு முறைமைபோல ஆன்மாக்கள் முன்னே விருப்பமுற்றுச்

செய்த கன்மங்களை நிச்சயம்பண்ணி நிறுத்தும். இறப்பு நிகழ்வு எதிர்வெ
னச் சொல்லவருங் காலதத்துவமானது சிவசத்தியுடன் கூடிநின்று இறந்த
காலத் தெல்லையினையும் நிகழ்காலத்துப் பலத்தினையும் எதிர்காலத்துப் புது
மையினையும் பொருந்துவிக்கும். கலையினாலும் வித்தையினாலும் பிரகாசிக்கப்
பட்ட கிரியாசத்தி ஞானசத்திகளையுடைய ஆன்மாவிற்குப் போகத்தில்
ஆசையையெழுப்புகல் காரணமாக வித்தையினின்றும் அராகந்தோன்றி
ற்று. இனி அராகத்தத்துவம் வேண்டுமோ விடயந்தானே ஆசையையெழு
ப்பாதோவெனின் விடயங்களை உற்றபடி யறிந்திருக்கையிலும் விருத்தர்க்கு
அவற்றிலாசையற் றிருக்கையாலே விடயமாசையை யெழுப்ப மாட்டாது.
ஆயின் புத்திகுணமான அவ்வயிராக்கியந்தா னெழுப்பாதோவெனின் அது
புத்தியின் வாதனையாதலான் ஆன்மாக்களை விடயங்களிலே செலுத்தமாட்
டாது. பாண்டத்திற்பற்றிய பெருங்காயவாசனை ஒருகாரியத்திற்குச் செயற்
படாமையின். இன்னும் அந்தவாதனைதான் ஓர்காலத்திலே தனித்தனியே
அகந்த வாசையை யெழுப்பும் அவற்றை இவன் ஒருகாலத்திலே அறியமாட்
டானாதலால் ஆசையை எழுப்புதற்கு அராகதத்துவம் வேண்டுமென்பதாம்.
இனி நியதியில்லாதபோது ஒருவன் செய்த கன்மத்தை ஒருவன் அனுபவித்
தல்கூடும். அரசராணையில்லாதபோது ஒருவன்செய்த போகத்தைப் பலவா
னொருவன் அனுபவிப்ப னாதலின். ஆயிற் கன்மந்தானே நியதியாகாதோ
வெனின் அது போகத்தைக்கொடுக்குமன்றி நியமிக்கமாட்டாது. சிவசத்தி
நியமியாதோவெனின் அஃது யாதானும் ஓர்தத்துவத்தை இடையிட்டன்றி
ஓர்காரியத்தை நடாத்தாது. நடத்தின் மற்றொரு தத்துவமும் வேண்டாவாய்
முடிகையாலே நியதிதத்தும் நியமிக்கவேண்டும். இவனுக்கு விருப்பமின்றி
யிருக்கவும் சூலைமுதலிய பிணிகவரத்தப்பாது புசிப்பித்துநிறுத்துவது நியதி
யெனக் கொள்க. இனி பால யவ்வன விருத்தங்களை விளைப்பித்து நிற்கை
யாலும் பிறப்புக்களையுண்டாக்குதலாலும் ஆறிருதுக்களினும் அவ்வப்பலன்
களைத்தப்பாது விளைவிக்கையாலும் காலதத்துவம்வேண்டும்இதனாற்காலதத்
துவமில்லையென்னும் உலகாயதனும் புத்தனும் நிராகரிக்கப்பட்டார்கள். இந்
தக் காலபூத பவிஷ்ய வர்த்தமானமென மூவகைப்படுதலாலே இதனை நித்
தியமென்றநையாயிகன்வைசேடிகன்மதங்களு நிராகரிக்கப்பட்டன. என்னை?
நித்தியமாயுள்ளது ஒன்றாயிருக்கவேண்டுமாகையாலுஞ் சடமாய்ப்பலவாயிற்
கடாதிகளைப்போல அழியுமாதலானு மென்க.

கலாதிகளைந்தினாலும் பந்திக்கப்பட்டுச் சோத்திராதிகளாற் பொருந்
தப்பட்ட விடயங்களைப் புசிக்கவருகிற அவதரத்திலே பும்சத்துவமென்று
ஒரு மலமுண்டாய் அவ்வான்மாப் புருடதத்துவமாமாறு அறிந்தோர் சொல்
வார். மெய்யின் கூறுபாடாகிய கலைகளைச் சோதிக்குமிடத்தில் இந்தப்புருட
தத்துவத்திற்குஞ் சுத்திபொருந்து முறைமையினை ஆகமங்கள் சொல்லும்
ஆன்மாக்களுக்குப் போகத்தைச் செய்யுங் கருவிகளின் றொடர்ச்சியை இங்
குத் தோற்றுவிப்பதான குணத்தின் கூட்டமாகக் கடவுளாற் செய்யப்படும்
பிரகிருதியானது பிரவிக்கண் மூன்றுகுணமாம். அவைதாம் சாத்துவிககுணம்
இராசதகுணம் தாமதகுணமாய் பிரிக்கையாலே இந்தக்கூறுபாட்டாற்பெயர்
சொல்லப்படும். அவற்றுள் ஒவ்வொன்றுதானே இவ்விரண்டு குணங்களைப்
பொருந்துகையுடைத்து இம்முக்குணங்களையும் புத்தியையும் அகங்காரத்
தையும்பற்றி நின்றுவிளங்கும் தனித்து நின்று விளங்காது. புத்திக்குக்கார
ணமாயிருக்கிற குணதத்துவமே அவ்வியத்தமென்று சாங்கியர் சொல்வர்

அஃததற்குக் காரணம் ஒன்றுயிருக்கின்ற மூலப்பிரகிருதியே அவ்வியத்தமாம். அவர் இப்பிரகிருதியை நித்தியமென்பது மடாது. என்னை ? இஃதான்மாக்கடோறும் வேறுபட்டுப் பலவாயிருக்கையாற் கடாதிகளைப்போல அநித்தமாகலின். ஆகவே இதற்குக்காரணம் மாயையேயாம். குணம் எண்ணிறந்தன முன்னர்ச் சாத்துவித ராசததாமதமென்றமுறையே சாத்துவிதகுணத்திலே பிரகாசமான ஞானமும், இலகுதையாகிய மனமொழிமெய்களின் பிரவிர்த்தியின் மெத்தனவும், இராசதத்திலே வியாபிருதியாகிய முப்பொறிகளின் மிகுந்த வியாபாரமும் அடர்ச்சியாகிய குரூர உரை சிந்தனை செயல்களும், தாமதத்திலே மிக்ககௌரவமாகிய மமதையும், அந்நியமாகிய தகாதகாரியத்தைச் செய்யவேண்டுமென்றுஞ் சங்கற்பமும் என்றிவை ஒவ்வொன்றிற்கு இவ்விரண்டாக விளங்கியிடும். இவை ஒன்பது குணமும் ஒவ்வோருயிர்தோறுங் கூடி நிற்கும். இம்மூன்று குணங்களுள் தாமதம்நிறைந்த இந்திரியங்களின் விடயங்க ளெல்லாவற்றையுங் கைக்கொண்டு மடங்கும். இராசதகுணம் போகங்களை ஆன்மாக்கொள்கைக் கிடமான வியாபாரத்தையுடைத்தாம். சாத்துவிகம் போகம் புசிக்கைக்கு ஒருப்படுவிக்க ஒழியாத மிக்கப் பிரகாசமாயிருக்கும். புந்தியானது எண்ணிறந்த விடயங்களையும் புசிக்கிறவிடத்தில் நிச்சயம்பண்ணுகின்ற ஒருமைப்பாடு அனேகவிதங்களையுமுடைத்தாய் முதல்வன் அனுக்கிரகத்தாலே ஐம்பது பாவகத்தைப் பண்ணுவிக்கும் (அறுநூற்றொருபத்திரண்டு பாகவத்தைப் பண்ணுவிப்பது முண்டு) சாத்துவிதம் பதினைந்து விதமாம். அவை: சாதிநெறிநிற்றல், பெரியோரைப் பேணல், கற்றறிவுடமை, இனியவை கூறல், தற்புகழாமை, உற்றதே வருமென மகிழ்ந்திருத்தல், நடுவுநிலைமை, சுத்தநியமம், பொறை, கடைப்பிடி, பிறர்க்கிதகாரியஞ் செய்தல், இந்திரலோகாதிகளில் வாஞ்சை, பிறர் தன்னைப் புகழுங்கால் தான் தன்னையிகழ்தல், அடக்கமுடமை, தன்பாலிரந்தார்க்கிரங்குதல் எனவாம். இராசதம் ஒன்பதுவிதமாம். அவை:—சூரணுகை, குரூரமுறைமை, ஊக்கமுடைமை, மானமுடைமை, வயிராக்கியம், பலம், வன்கண்மை, போகியாதல், இடம்பத்தனமான கூடாவொழுக்கம் எனவாம். தாமதகுணம் ஒன்பதுவிதமாம் அவை:—அழுக்ககாதனவற்றிற்கு அழுகை, கல்வியில்ஆதரவறுகை, இழந்தாரைச்சேர்ந்து வாழ்தல், கோளுரை, மமதை, பேருறக்கம், நன்மைசெய்தற் கிளக்கை, குலங்குணமீகை பிரக்கங்களால் எனக்கு யாரும் இணையில்லை யென்கை, திருடுதல் எனவாம். ஆக முப்பதுமூன்றெனக் கொள்க. முக்குணங்களுள் ஒன்றுமேலிட்டு மற்றையிரண்டு மடங்கிச் சிறிதுவிளங்கும். ஒருவனுக்கு முக்குணங்களும் ஒத்துவிளங்குதலில்லையெனக்கொள்க. சாத்துவிக விராசத தாமதங்களால் அடைவேவீடுஞ் சுவர்க்கமும் நரகமும்பெறுவர். சாத்துவிகத்திற் சாத்துவிசமுதலிய வொன்பதுபேதமும் அந்த முப்பத்துமூன்றனுள் அடங்கும். விரிக்கிற் பெருகும். இனிச்சித்தம் புத்தியின் விகற்பம் எப்படியெனின் அவ்வியத்தமாவதாகலின் வித்துப்போல முக்குணங்களும் அடங்கிநிற்கும் அவதரம். குணதத்துவமாவது வித்தினின்று மங்குரந்தோன்றினாற்போல அவ்வியத்தத்திலே நின்று மூன்று தோன்றிச் சட்டமாயலைவறநின்ற அவதரம். அதுவே சித்தம், இவற்றின் ஏற்றக்குறைச்சலே புத்திதத்துவம். அது இராசதமும் தாமதமும் குறைந்து சாத்துவிகமேலிட்டஅவதரம், புத்தியின்காரியம் தன்மஞான வைராக்கிய வயிசுவரிய நான்கும், அதன்மாதிநான்குமெட்டாம். இவற்றுள் தன்மத்தினின்றும் பத்துப்பாவகமும், ஞானத்தினின்றும் நூற்றெண்பது பாவகமும்; வயிராக்கியத்தினின்றும் அறுபத்துநாலு பாவகமும், அயிசுவரி

யத்தினின்றும் நூற்றெழுப்பத்தாறு பாவகமும்; இனி அதன்பத்தில் பத்தும், அஞ்ஞானத்தில் அறுபத்தாறும், அவ்வயிராக்கியத்தில் நூறும், அயிசுவரியத்தில் எட்டும் ஆகப்புத்தியின் பாவகம் அறுநூற்றிருபத்திரண்டு வகை. விரிவையுரைப்பிற் பெருகும்.

சித்தாந்தசரபம்.

ஜாதிகள்.

(62-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஒரு கூட்டமாயிருந்த சித்திரகுள்ளரான பிராமணர் ஒரு புது இந்திரனைச் சிருட்டித்து விட்டார்கள் (மகாபாரதம்.)

தூர்வாசன்—என்கிற ஒரு பிராமணனால், லஷன் என்கிற இராசன் சுவர்க்கத்திலிருந்து தூரத்தப்பட்டுப் பாம்பாய் விட்டான். (மகாபாரதம்.)

வசிஷ்டன்—என்கிற பிராமணன் சௌதசன் என்கிற இராஜனை இராக்கதனுகச் சபித்துவிட்டான். (விஷ்ணு-நாரதிய புராணம்.)

மாண்டவ்வியன்—என்கிற பிராமணன் இயமனை பார்த்து ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகளை, எப்படிப்பட்ட பாவசெய்கைகளைக் குறித்தும் நரகத்துக்குள்ளாக்க வொண்ணுதென்று கட்டளையிட்டான். (மகாபாரதம்.)

தூர்வாசன்—சாபத்தால் சுவர்க்கநாடரில் ஒருவனுகிய வசு என்பவன் இராஜாளியாய் விட்டான். (மார்க்கண்டேய புராணம்.)

சபரி—என்கிற ஒரு பிராமணன் நூறுசரீரமெடுத்து ஒரு இராசாவினுடைய நூறுபெண்களைத் தனித்தனி மணஞ்செய்து நூறுவருஷம் அவர்களோடு தனித்தனி கூடிவாழ்ந்தான். (நரசிங்கபுராணம்.)

இருஷிய சிருங்கு அல்லது கலைக்கோட்டு மகாமுனி என்கிற பிராமணன் உரோமபாதன் என்கிற இராசாவின்நாட்டில், பன்னிரண்டு வருஷம் மழையில்லாதிருந்த காலத்தில் மழைபெய்வித்தான். (இராமாயணம்.)

விசுவாமித்திரர் என்கிற பிராமணர் திரிசங்கு என்னும் இராசனுக்காக அவன் சுவர்க்கத்துக்கு ஏறிப்போகாமலும் பூலோகத்திற் கிறங்கி வராமலும் இந்த நாழிகைவரைக்கும் அந்தரத்தில் தானே இருக்கும்படி நிறுத்தி விட்டான். (இராமாயணம், மகாபாரதம்.)

திருது—முதலாகிய பிராமணர் சிவன் தங்கள் மனைவிகளைக் கற்பழித்த நிமித்தம் சிவனுக்குப் புருஷத்துவ மில்லாமற்போகச் சபித்துவிட்டார்கள். (ஸ்காந்தபுராணம்.)

பிராமணன் படித்தவனுனாலும், படியாதவனுனாலும் தனக்குச் சமமென்று கிருஷ்ணன் ஒத்துக்கொள்கிறார். (மகா பாரதம்.)

முன்னமே ஒருபிராமணனுக்குத் தானஞ்செய்திருந்த ஓர் பசுவைப் பிசகாய் மற்றொரு பிராமணனுக்குத் தானஞ்செய்த நிருகு—என்கிற இராசாவை, ஒரு பிராமணன் சபித்ததினுல் அந்த ராசா பல்லியாய் விட்டான். (மகா பாரதம்.)

இவ்வித தந்திரோபாயங்கள் செய்துவரும் பிராமணருக்கு விஸ்தாரமாகிய விக்கிரகாராதனைகளில் பிராமணருக்குச் செலுத்தப்படுகிற காணி

க்கை வருமானங்கள். ஒரு சக்கிரவர்த்திக்கு வருகிற அரசிறை வருமானத்தைவிட அதிகமாயிருக்கின்றது. ஒரு சூத்திரன் பூணூல் தரித்துகொள்வானாகில் அவனுக்கு கடினமான அபராதம் விதிக்கவேண்டும். அவன் ஒரு பிராமணனுக்கு அடிக்கடி இடைஞ்சல் செய்வானாகில் அவனுக்கு மரணதண்டனை விதிக்கவேண்டும். ஒரு சூத்திரன் பிராமணனுடைய மனைவியோடு சோரகுற்றஞ் செய்வானாகில் அச்சூத்திரனுடைய மானியையறுத்து மழுவாய்க்காய்ந்த ஒரு பெரிய இருப்புத்தகட்டின்மீது அவன் இறந்து பஸ்பமாகிறவரையில் பிணைத்துவைத்திருக்க வேண்டியது. ஒரு பிராமணன் சூத்திரனுடைய சொத்தைத் திருடுவானாகில் அந்தப்பிராமணனுக்கு அபராதமாத்திரம் விதிக்கவேண்டும்; ஆனால் சூத்திரன் ஒரு பிராமணனுடையசொத்தைத் திருடுவானாகில் அப்படிப்பட்ட சூத்திரனை தீயினால் சுட்டெரிக்கவேணும். சூத்திரன் பிராமணனுடைய சமுக்காளத்தின்மீது உட்காருவானாகில் அந்த சூத்திரனுடைய் குசத்தில் காய்ந்த இருப்பின் வசியையேற்றிச் சூட்டுகோலால் சூடி இராச்சியத்தை விட்டுத் துரத்திவிடவேண்டும். ஒரு சூத்திரன் கர்வத்தினால் பிராமணன்பேரில் எச்சலுமிழ்ந்தால், அவனுடைய உதடுகளை அறுத்துப் போடவேண்டியது. சூத்திரன் பிராமணனை அடித்தால் அவன்கரங்களை துண்டிக்கவேண்டியது.

ஒரு எளிய சூத்திரனுடைய செலவிலும் அவன் நஷ்டத்தை அடைவதாயிருந்தாலும் பிராமணன் முக்கியமான சுதந்தரங்களை அனுபவிக்கலாம். எல்லா நீதிவிசாரணையிலும் சூத்திரனைவிட அளவிலாப் பிரயோஜனத்தைப் பிராமணன் அடையவேண்டும்.

ஒருவன் அசந்தர்ப்பமாய் பிராமணனுடைய ஒருதுளி உதிரத்தை தரையில் சிதறச்செய்வானாகில் அந்தத் துளியில், தூசியின் அணுக்கள் எத்தனை ஒட்டுமோ அத்தனை தேவவருஷங்கள் வரைக்கும் அவன் நரகவேதனை யடைவான். .

சூத்திரன் ஒருவன் எதிரில்வரும் பிராமணனை தகுந்தமரியாதைசெய்து வரவழைக்காவிடில் அச்சூத்திரன் மறுபிறப்பில் மரமாய்ப்பிறப்பான்.

ஒரு சூத்திரன் பிராமணனைக் கோபமான பார்வையோடு பார்ப்பானாகில் அவன் விழிகளை யமன் பிடுங்குப்போடுவான். (தொடர்து வரும்.)

சி· ம· இ· மூர்த்தி.

உலகர் புராண சாரசங்கிரகம்.

தேசாபிமான ஞானிக்கும் ஆத்மாபிமான ஞானிக்கும் சம்பாஷணை.

(குரு துதி.)

திருவளர் ஞானச்செல்வரைத்தூறும், சிறுமதிலோக தேக ஞானிகளின் சரித்திர சாரசங் கிரகமோத, சற்குருநாரணர் சத்கழல் காப்பே.

ஆத்மஞானி:—ஹே! தேகாபிமானஞானி கடவுளின் திருசிய வடிவமான லோகத்தில்தோன்றிய சராயுஜ-அண்டஜ-உற்பஜ-வியர்வசமெனும் நால்வகையோனியின் கண்முனைத்தெழுந்த எழுவகைத்தோற்ற எண்பத்திநான்கு லட்ச ஜீவபேதங்களில் பரிசவறிவொன்று மாத்திரமுள்ள தாவ

ராதிகட்கும், பரிச-ரஸமெனும் இரண்டறிவுள்ள சரஜந்துக்களாகிய நத்தை, சங்கு முதலியவைகட்கும்; பரிச-ரஸ-கந்த-ரூபமெனும் நான்கறிவுள்ளவண்டு-தும்பிகட்கும்; பரிச-ரஸ-கந்த-ரூப-சப்தமெனுமையறிவுள்ள பட்சி-விலங்குகட்கும்; மேற்பட்டு பகுத்தறிவோடும் கூடிய சரீரங்களுள் உத்தம சரீரமான மானிடசரீரம் உனக்குக் கிடைத்தும்; கடவுளால் வெளிப்படுத்திய முதனூலாகிய வேதத்திலும், இதையனுசரித்துக்கூறும் முனீஸ்வரர்கள் வாக்காகியவழிநூலெனும் ஸ்மிருதிகளிலும், இவ்விரண்டிலும்கூறும் கருத்தைவெளியிடும் வேதமூர்த்தியாகிய வியாசபகவானால் வெளிப்படுத்திய சார்புநூலாகிய பதினெண் புராணங்களிலும் கூறும் ஆத்மஞானத்தை யுணராது வாளா கெட்டுப் போகின்றது நன்றலவென்றனன்.

தேகஞானி:—ஓ! ஓ! ஆத்மஞானியே நன்குகூறினை "சுவர்வைத்துக்கொண்டல்லோ சித்திரம்எழுதவேணும்" அதுபோல் ஆத்மாபிமானம்வைத்து பெண்கள் உபதேசம் கேட்காமல் உலகசுகாசுகத்தை வெறுத்து கட்டகந்தைக்கும் உண்ண உணவிற்கும் கதியின்றி காடுகுகைகளில் அலைந்துதிரிவது ஞானமுள்ளவர்க் கழகாகுமோ வென்றனன்.

ஆத்மஞானி:—ஹே! தேகஞானியே நின் அறிவீனசசொல் என் செவிக்கேறி யென்மனம் வருந்துகிறது "இல்லறத்திலிருந்து விதய மடக்கிய வல்லவன்றனே மஹா யோகியன்றே, துறவறத்திருந்தும் சூழ்மனக் குரங்கை தனதகத்தடக்கான் அஞ்ஞானி யன்றே" வெனும் ஆன்றோர் வாக்கியம் மறந்தனையோ? பொன்னையும் மாதரையும் பூமியையும் நிந்தித்து, அறியாமையை விட்டகலாமல் பெரியவாள் பேரைக் கெடுத்து வேஷங்காட்டும் பேர்கள்தான் ஞானிகளென்றும் மற்றவர் அஞ்ஞானிகளென்றும் உணர்ந்தனையோ? பிர்மா-விஷ்ணு-ருத்திரன்-வசிஷ்டர்-ஜனகன்-மாபலி-பகீரதன் முதலியோர்கள் பெண்டுபிள்ளைகளோடு கூடிவாழ்ந்து ஞானிகளெனப் பெயர்பெற்று வருவதல்லாமல் இன்று நாளைக்கும் இவ்வுலகில் அநேகபெரியவாள் அதேமாதிரி ஆத்மஞான மடைந்திருப்பதை நாம்கண்டும் புராணங்கள் வாயிலாகக்கேட்டும் இருக்கின்றோமே என்றனன்.

தேகஞானி:—பலே! பலே! ஆத்மஞானி இயல்-இசை-நாடகமாகிய வேதம் ஸ்மிருதிபுராணம் இம்மூன்றும் ஆத்மதத்வத்தையே போதிப்பதாயும் தெரிவித்த வேதவியாசருக்கும் அதைநம்பி போதிக்கவந்த உமக்கும் பெண்சுகமறியாப் பேதமை புத்தி அதிகமிருப்பதாக நினைக்கிறேன். தேகத்தைக்காப்பாற்றி இவ்விகசௌக்கியமடைந்து மரணமடையாமல் வாழும்வித்தை நீவிர் அறிந்திலர்போலும் காண்கிறது என்றனன்.

ஆத்மஞானி:—ஆ! ஹா! தேகஞானி! முன் துவாபரயுகக்கடையில் பராசரிஷியினிடம் தோன்றிய வேதவியாசர்தான் ஜீவர்கட்கு எழுதிவைத்த பதினெண்புராணத்திலுள்ள ஆத்மதத்துவத்தை யுணரா தொழிந்தனரோவென்று கருணைகூர்ந்து இக்கலியுகம் ஐயாயிரம் செல்வதற்குள் "பூலோகவியாச" பத்திரிகை ரூபமாய் வெளிவந்து நின்போன்ற பாமரர்களின் அறியாமையை வெளிப்படுத்தி யறிவூட்டும்படி பண்டிதரூபிகளின் மனதில் குடியேறினர். அந்தோ! (3) பெண்மதிசாஸ்திரம் பெற்

றனரதனாற், கண்மதியிழந்து கலங்குமுலகர்கள். தத்தம் வீட்டுப் பெண்கள் கூறும். (4) சொல்லும் பித்துரை சேர்க்குமென்-றல்லும் பகலுமறிவில ரறைவர். என்றபடி நினக்கு கவிவாயிலாகவும் வசனவாயிலாகவும் போதித்து நின்போலியரை ஆத்மஞானிகளாக்க கருதி வெளிவந்தனர்.

தேகஞானி:—நிராதரனாகிய ஆத்மஞானியே! மாதுர்துரோகி-பிதுர்துரோகி குக்ஷித்துரோகி-சகோதரதுரோகி-குரு துரோகிகளாகிய கும்பிடுங்கள்ளன்-குழைத்திடுங் கள்ளன்-அழுங் கள்ளன்-தொழுங் கள்ளன்-ஆசாரக் கள்ளன்களெனும் என்சகோதரர் நின்னைக் கண்டுழிநின் மூளைச்சிதற அடித்து, உன்னிட புராணக்கட்டுக் கதைகளைக் கிழித்து அக்கினிப் பிரயோகம் செய்வார். பெண்மதிசாஸ்திரம் கேளாதவன் மூவுலகிலும் இல்லை எப்படியெனில் சிவபெருமான் பெண்மதி மாறாது கேட்க விரும்பியல்லவோ தலையில் கங்கை யென்பவளையும் இடது பாகத்தில் பார்வதியையும் வைத்து தன் பாதியுடலை பெண்ரூபமாக்கினன். விஷ்ணுவீட்டுப் பெண் விலகியிருந்தால் அவள் உபதேசம் கேட்கத் தடைப்படும் என்று தன் மார்பில்வைத்து, ஒருவேளை குதித்தோடப் போகிறாளெ சங்குசக்கரம் காவல் வைத்தனன். பிர்ம்மாவானவர் மேலிருவர் செய்தது அறியாமை இவர்கள் தூங்கும்போது மனைவிகள்மாயாஜாலத்தால் ஏமாற்றிப் போவர்களென்று உணர்ந்தவராய் தன் நாவில்தன் மனைவியாகிய சரஸ்வதியைவைத்து வாயைமூடி நின்றனர் என்றார்.

ஆத்மஞானி:—ஹே! தேகஞானி! புராணங்களின் தத்துவார்த்தம் அறியாத புல்லறிவினனே! சிவமென்பது மங்கள கரமாகிய பரமாத்மா இதைவிட்டுப்பிரிய முடியாத இச்சாசத்தி - ஞானசத்தி - கிரியாசத்திகளை. முறையே கங்கை - பார்வதி - காளிஎன்று வேதாகமபுராணங்கள் கூறும். இதேமாதிரி விஷ்ணுவென்பது சர்வ வியாபகமாகிய பரமாத்துமா இதைவிட்டுப் பிரியாத அசுத்தாசுத்த மாயைகளை மூதேவி சீதேவிகளென இரண்டு மனைவிகளாகக் கூறப்படும், பிர்மாவென்பது தன்னிடமிருந்து சகத்தையும் தோற்றிவைக்கும் திருக்குரூபியாகிய பரமாத்மா இதிலிருந்தெழுந்த சப்தசுர சொரூபம் சரஸ்வதி என்பவள். இக்கருத்துணராது "ஸ்ரீ புத்திபிரளயாந்தகா" எனும் ஆன்றோர் வாக்கியத்தை யலக்ஷியம் செய்து பெண்மதிகேட்டு பெரியரை நிந்திக்கும் வெறியரே போம்போம் உன் மரபினரைப்போல் மும்மூர்த்திகளையும் நிந்தித்த வுனக்குக் கைம்மாறு கண்டிலன் என்றனர்.

தேகஞானி:—ஓ! ஆத்மஞானி! "ஞானமும் கல்வியும் நாழியறிசிக்குள்" எனும் பழமொழி மறந்தீர்போலு "அநித்தியானி சரீராணி அந்துரு சொம்முலு நாக்கேராணி" எனும் பெண் உபதேசக்கேட்டு சம்பாதித்து அந்நியருக்கு அரைக்காசும் கொடாமல் பத்திரப்படுத்தினாலல்லோ தின்றுக்கொழுத்து தில்லானம் பாடலாம் "சும்மாவருமா அம்மாசுகம்" "பொத்தச்சரீரம் காவாதான் பொன்னுலகம் ஏறுவையோ சீ! பயித்தியக்காரா சரீரபிரமாணம் வைத்துழலுவை என்றனன்.

ஆத்மஞானி:—ஹே! தேகஞானி! உனக்கு சாக்கிராவஸ்தை (விழிப்பு), சொற்பனாவஸ்தை (கனவு) சுழுத்தியவஸ்தை (நித்திரை) இம்மூன்றும் தினந்தினம் வந்துகொண்டிருக்கிறதல்லவோ அதில் ஓர் அவஸ்தையில்

கண்ட அனுபவம்போல் மற்றோர் அவஸ்தையி லில்லையல்லவா உன்நித்
திரையில் "மாதாநாஸ்தி பிதாநாஸ்தி-நாஸ்திபந்து சகோதரா-அர்த்
தம் நாஸ்திகிரகம் நாஸ்தி-தஸ்மீசாக்கிரதே சாக்கிரதா" எனும் சுருதி
வாக்கியப்படி உன்தேகாதிபிரபஞ்சத்தை நீகண்டதில்லையென்பதுஉண்
மையோ பொய்யோ ? ஆகையால் என்னை சரீரஅபிமானம் வைக்கும்
படி கூறும் நின் "தாய்தந்தையருட லன்பில்லாரோ வுடல்தாங்க வழி
யுளதேல் நில்லாரோ இதை அறிந்திலைபோலும் ? "உலகொரு குடை
நிழலாண்டாரோ வொருவர் பிழைத்திலர் மாண்டாரா" எனும் பெரி
யோர் வாக்கியப்படி நானுணர்ந்த அனுபவம்கூறில் நின்போலியர் மறு
ப்பதால் அவர்கள்பொருட்டும் நின்பொருட்டும் அடியிற் கூறுவதைக்
கவனி. (வரும்) T. V. K.

உலகம் சத்தா ? அசத்தா?

பூலோக நண்பர்களே! யான்மனத்திற்கொண்ட சிலஆசங்கைகளை நிவர்
த்திக்க வெண்ணி, கிரி, நதி, சமுத்திரங்களுடன் கூடிய அநேக தீபாந்திரங்க
ளையும் அதல, விதல, சுதல, ரசாதல, தராதல, மகாதல, பாதளமென்னும்
கீழ்லோகங்களென்ன, பூலோக, புவர்லோக, அவர்லோக, மகாலோக,
ஜனலோக, தபோலோக, சத்தியலோகங்களென்ன, கைலாசம், வைகுண்
டம், சுவர்க்கம், அக்னிலோகம், எமலோகம், ஈசான்யலோக மென்கிற
அநேக ஆவாந்தரலோகங்களென்ன, அந்தந்தலோகங்களில் வசிக்கப்பட்ட
ஸ்திரீ, பரிவாரங்கள் சகிதமாயுள்ள இந்திரன்முதலிய அஷ்டதிக்கு பாலகர்
கள், சூரியன் முதலிய நவரத்தினங்கள், முப்பத்துமுக்கோடிதேவர்கள்,
பிதுருக்கள், அசுவினீ தேவதைகள், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள், பதி
னோரு உருத்திரர்கள், பன்னிரண்டு ஆதித்தியர்கள்,எழுமருத்துக்கள், எட்டு
வசுக்கள், கருடர், கந்தர்வர், கின்னரர், கிம்புருஷர்கள், யக்ஷகர், ராக்ஷஸர்.
அறுபத்தாயிரங்கோடி அசுரர் பூதங்கள், பேதாளங்கள், சாகினிகள், டாகி
னிகள், பிரேதங்கள், பைசாசங்கள், குக்யர்கள், சித்தர்கள், வித்தியாதரர்
கள், அப்ஸரனுகள், மானுடர்கள், மிருகங்கள், பசுவேதஜ, உற்பிஜங்களென்
கிற நான்கு விதங்களான பூதசமூகங்கள் அவ்வப்பிராணிகளுக்கு உபயோக
மான அன்னபனாதிகள், கடபடாதிசதசத் பதார்த்தங்கள் ஆகிய இத்தன்
மைத்த பிரபஞ்சத்தை யுண்டுபண்ணி காலத்திற்கேற்றபடி அழித்தும், காத்
தும், இரக்ஷித்து வரப்பட்ட சுயம்புவாய் எங்கும் என்றும் சொருபமாயும்
அரூபமாயும் இரண்டற்றதாயும் அகண்ட சச்சிதானந்த நித்தியபரிபூர்ண
அனந்த கல்யாணகுண பூஷணதிவ்ய மங்கள ஸ்தாவரஜங்கம் ஸ்வரூபமாய்
விளங்காநின்ற சாக்ஷாத் ஜகதீசனைப்பிரார்த்தித்து "பூலோகவியாசன்" மூலி
யமாக தலைப்பிற் காட்டியுள்ள " உலகம்சத்தா ? அசத்தா ?" என்னும்
பெரிய ஆக்ஷேபனையை எடுத்தெழுதவேண்டி இறகேந்திவிட்டேன். வியாச
னின் நண்பர்கள் அனைவரும் ஏகமனத்தினராய் இருந்து எம்மனத்தைச் சந்
துஷ்டிசெய்வதோடு துராக்ஷேபனை செய்யாமலிருக்க கோருகிறோம். சத்து
என்பது சத்தினிலக்கணம் கூறுகின்றது; சத்துயாண்டுமுள்ளது; சத்தெனி
னும் உள்ளதெனினு மொக்கும்.

அசத்தென்பது. அசத்தினிலக்கணம் கூறுகின்றது. அசத்துயாண்டு
மில்லது; அசத்தெனினும் இல்லதெனினு மொக்கும். சத்துக்கு உதாரணங்
கூறுகின்றது; படம். அது படமென்னும் சொல்லும் அதன் றோற்றமும்

பொருளுமுடனிகழ்வது. படமெனினும் ஆடையெனினுமமையும். அசத்துச் சொல்மாத்திர மாதற்கு உதாரணங் கூறுகின்றது. மலடிமைந்தன். அசத்தாச் சொல்மாத்திரமுந் தோற்றல் மாத்திரமு மாதற்கு உதாரணங் கூறுகிறது. கயிற்றரவு, கானனீரென இவை. அசத்தின் இரண்டுவகை உதாரணம் விளங்க விளங்கவுரைக்கின்றது; மலடிமைந்தன் தோற்றல் மாத்திரமென்பது, எனைத் துணையுமின்றிச் சொல்மாத்திரமாகவே நிகழ்வது. கயிற்றரவு சொன்மாத்திரமுந்தோற்றல் மாத்திரமுமாய் நிகழ்வது இது முன்னர் மயக்கத்தான் அரவெனத் தோற்றித் தெளிந்தவழிக் கயிறாகவே நிகழ்வது. அது காரணமான கயிற்றைக் கண்டபின்னர் காரியமான அரவு தோன்றாது, கயிறென்றே காணப்படுவதென்பது கருத்து. கானனீர் சொல்மாத்திரமுந் தோற்றல் மாத்திரமுமாய் நிகழினும் கயிற்றரவுபோல் காரணங்கண்டவழி காரியந்தோற்றாதிருப்பதன்று. நீர் தோற்றிக்கொண்டேயிருப்பதுபோல்வது. அங்ஙனம் தோற்றியதொன்று நீரெனபதெத் துணையுமின்றே. மலடிமைந்தன் போன்று தோற்றமென்பதின்றிச் சொல்மாத்திரமுமா யிருப்பதூஉம், கயிற்றரவு கானனீரும் போன்று சொல்மாத்திரமும் தோற்றல் மாத்திரமுமாயிருப்பதூஉம் கயிற்றரவு கயிற்றைக் கண்டவழியரவு தோன்றாதிருப்பதூஉம், கானனீர் கானலை யுணர்ந்த வழியுநீர் தோற்றிக்கொண்டிருப்பதூஉம். மூவகையும் அசத்தின்பாற் படுமென்க. படமென்பதற்குச் சொல்லும் தோற்றமும் பொருளுமென்னு மிம்மூன்றும் உண்மையின் சத்தெனப்படும். இது நிற்க; இனி உலகம் சத்தா? அசத்தா? என மேற்கூறிப்போந்த நியாய வாயிலாகக் காரிய காரணவாத வேதுவின் கடத்தைக்கொண்டு விவகரிப்பாம். காரியமென்பது; காரியத்தினிலக்கணங் கூறுகின்றது. காரியமுன்னின்மைக்கு எதிர்மறை. காரணமென்பது; காரணத்தினிலக்கணங் கூறுகின்றது. காரணம் காரியத்திற்கு நியதமாய் முன்னிற்பது. நியதமின்றி யமையாமை. காரணமெனினுங் கருவியெனினு மொக்கும்.

P. J.

சுவர்ணாம்பாள்.

48 ம் பக்கத்தொடர்ச்சி.

இவளது ஸ்தனத்தை கனகமலையென் றுவமிக்கலாம் ஆனால் அம்மலையானது முன்னொருகாலத்தில் ஈஸ்வரனுடைய கைக்குவளைந்ததாக புராணங்கள் கூறுகிறது. அதனால் நாம் அதற்கு ஒப்பிடுவதுங் கூடாமையாயிருக்கிறதென்பான். மற்றென்னை அழகுபொருந்திய பந்துகளிணைந்திருக்கிறதாகச் சொல்வோமா? அப்பந்துகள் மற்ற ஸ்ரீகள்கைக்கு படங்கியெழுகின்றமையால் அதற்கு மொப்பிட்டுக் கூறுவது சரியன்று. ஆனால் வாசனை வீசுகின்றபூங்கொத் தென்னலாமா? ஆனால் பெரியதென்றற் காற்றுவீசும்போது அவைகள் சிதறுங்குண முடைத்திருக்கின்றமையா லங்ஙனஞ் சொல்லவுங் கூடாமையாயிருக்கிறது. அல்லது நல்லபக்குவத்திலேயிருக்கிறமாங்கனிகளென்று கூறுவோம். ஆனால் கிளிகள்கொத்திவிட மீளவும் அக்கனிகள் விருத்தியடையாது அதனால் அங்ஙனஞ்சொல்லவுங் கூடாமையா யிருக்கிறது தகுந்த யானையின் மஸ்தகமென்று சொல்வோம். சொன்னால் அம்மஸ்தகம், பாகனுடைய இம்சைக்கு அடங்கினதாக விருக்கின்றமையின் எப்படி சொல்வது? கூடாது. ஆகையினால் இப்பெண்மணியே முதலிருந்த பூமியிலே தனக்கு நேரின்றிதானே தனக்குச் சரியாகி, ஞானமெல்லாந் தமது சிந்தைக்குடத்திற ருங்கிய மௌனமுனிக் குரும்பையடக்க வில்லேந்திப் புரப்பட்ட மன்மதனுக்கும், அவன் மனைவியாகிய இரதிதேவிக்கும், போட்ட கூடாரம்போ

னும், மார்பை யிடமாகக்கொண்டு, பூரித்து, இறுமாந்து, விம்மி, முத்துவடங்களா விறுக்கி, மென்மேல்வளர்ந்து, மந்திரங்களெழுதியஇரண்டுசக்கரங்களை யிருத்தி அச்சக்கரங்கள்நிற்க கறுப்பாணிநாட்டி கிடைத்தற்கரியபாளிதலேபபடீர மூலாவுபலாளித மோகனராஜ சம்மேள மனோகர காமவிநோத. விகார வசீகர கோமள சீதளமாகி அரும்பி விரும்பியசைந்து தசைந்து நிறம்பி நெருங்கி நெகிழ்ந்து பரந்து சுணங்கு நிறைந்து சுகந்த கதம்ப மணங்குடிகொண்டு, வயங்கி இணங்கி, பெரிய தவத்தையுடைய முனிவர்கள் சிந்தையானது அடங்கி மடங்கி வருத்தப் பாடெய்தும்படி நெருங்கி, மீளவொருதீதுமில்லாத செழுந்தாமரையில் மோதுஞ் சிறுதிவலை போற்பசலைபடா வெண்ணிலாவை வெல்லுமுத்துக்கச்சுப்பொருந்திய கனதனத்தையுடைய இவளை நாம் காணப்பெற்ற பாக்கியமே சிலாக்கியமென்பான், மீண்டும் அவ்விளங்குமரன்; ஆசையினால் துதித்திக்கின்ற காமுகர்மேல் இன்பவேள் தனது அடையாளத்தைச் சாத்துகின்ற முத்திரக்கோல்போலவும், சூத்திரங்கண்டாராயு மொருவரறியாத வமிர்தநிலைக் கோயிலைத் திறக்குந் திறவுகோல்போலவும், பவளமேனியுடைய கொம்புபோலவும் உள்ள இவளது விரலினழகும், தாமரையரும்பைப்பொய்யாக்கி, காந்தள்மலரை வனத்துக்கனுப்பிவிட்டு, காமுகர்மேல்கடுங்கோபத்துடன்வீசிப் புடைத்தாலு மிங்கிதத்துமோகம்பூரிக்க முடிதுவக்கித் தாளளவும் ஆகம் பூரிக்கச்செய்யும் இவளது அகங்கையினழகும், யாழினது கோட்டினையொத்து கடகமணிந்த இவளது முன்னங் கையினழகும், கொங்கைகளாகிய மலைகளில் விளைந்துவளர்ந்த மூங்கிற்கழைபோலும் முள்ள இவளது தோளழகும், பாளைமடலவிழ நாள்செல்லும் பருத்துள்ள இளங்கமுகனைய இவளது கழுத்தினழகும், வண்டுகளினது கால்கள் பதியாமலும், சூரியனைக்கண்டால்மாத்திரமன்றி சதாவிகஜிதமாயிருக்குமிவளது தாமரைமுகத்தினழகும், மாட்சிமைதங்கிய பவளமோ? ருத்திரவில்வமோ? மாதளையோ? இந்த்ரகோபமோ? தூதளையோ? கிஞ்சுகமோ? ஆதொண்டையோ? வண்டினங்கள் தாதளையுஞ் செங்குமுதத் தண்மலரோ? எதென்றெவருமுவமானிக்க விடந்தராத இவளது செம்மையான (உதடு) இதழினழகும், முத்துபோலும், மயிலிறகினடிபோலும், முல்லையரும்புகளின் கொத்துபோலும், தந்தக் குருத்தரும்பி விஸ்தாரஞ்செய்யும் பத்மராகமணியைத் தரம்பிரித்துத் தேய்த்து ஒப்பமிட்டுவைத்த சேர்வைபோலும், இருந்து இருபக்கமும் பூங்காவியேறிய பற்களைகண்டு மனமுருகி பூணநகைக்கும்புகழ்கொல்லியப்பாவை நாணநகைக்குமிவளதுநகையினழகும். மேலோர் தீட்டிவைத்த சித்திரத்தை சிங்காரமோகனக்கூத் தாட்டிவைக்கு மிவளது செஞ்சொலழகும், மண்ணாடர் விண்ணாடர் வந்தழகு பார்க்கவைத்த கண்ணாடிபோன்ற இவளது கபோலத்தினழகும், மற்றும், (இன்னுந்தொடரும்)

குமரவேள்.

களவழி நாற்பதுரை.

(68 ம் பக்கத்தொடர்ச்சி.)

நிரைகதிர் நீளெஃகம் நீட்டி வயவர்
வரைபுரை யானைக் கைநூற—வரைமேல்
உருமெறி பாம்பிற் புரளுஞ் செருமொய்ம்பிற்
சேஎய்பொரு தட்ட களத்து.

(பொ-ரை) போர் வலிமையையுடைய செங்கட்சோழன் போர்செய்து

கொன்ற போர்க்களத்தில்; நிரைத்த வொளியினையுடைய நீண்டவாளை, பின்னைவாங்கி வீரர்கள் மலையையொத்த யானைகளது கைகளை துண்டுபடுத்த, மலையின்மேல் இடிவிழுந்த பாம்பைப்போல புரளாநிற்கும்.

(வி-ம்) மலையின்மீது இடிவிழ அம்மலையினிடத்துள்ள பாம்பிற்குண்டாகுமிம்சை எத்தன்மையாக விருக்குமோ அது போன்றிருந்ததென்க. (13)

கவளங்கொள் யானையின் கைதுணிக்கப் பட்டுப்
பவளஞ் சொரிதரு பைபோற்—றிவளொளிய
வொண்செங் குருதி யுமிழும் புனனாடன்
கொங்கரை யட்ட களத்து.

(பொ-ரை) நீர்நாட்டையுடைய செங்கட்சோழன் கொங்குநாட்டரசரைகொன்ற போர்க்களத்தில்; கவளத்தைக்கொள்ளும் யானைகள் (தம்) துதிக்கைகள் (துணிக்கப்பட்டு) துண்டுபடுத்தப்பட்டு பவளத்தைச் சொரியாநின்ற பையைப்போல விளங்கும் ஒளியையுடைய ஒள்ளிய செவந்த வுரத்தினை யுமிழாநிற்கும்.

(வி-ம்) பவளத்தை நிறைத்து வைத்திருந்த பையையவிழ்க்க வதினிடத்திருந்து சிந்தும் பளங்கள் எவ்விதமாய்ச் செந்நிறம் பெற்றிருக்குமோ வதுபோல துதிக்கையறுபட்ட விடத்தினின்று மிவ்யானைகள் சிந்து முதிர மிருந்ததென்க. (14)

கொல்யானை பாயக் குடைமுருக்கி யெவ்வாயும்
புக்கவா யெல்லாம் பிணம்பிறங்கத்—தச்சன்
விடுபடு பள்ளியிற் றோன்றுமே செங்கட்
சினமால் பொருத களத்து.

(பொ-ரை) கோபத்தையுடைய செங்கட்சோழன் போர்செய்த போர்க்களத்தில்; எவ்விடத்துங் குடைகளையழித்து கொல்லும்யானைகள் பாய்தலால் அவ்வியானைகள் புகுந்த விடமெல்லாம் பிணங்கள் விளங்க தச்சனால் வினைசெய்யப்பட்ட விடங்கள்போலத் தோன்றாநிற்கும்.

(வி-ம்) சமரிற்பட்டுக் கிடந்தபிணங்கள்மீது யானைகளின் கால்கள் அழுந்துதலால் உண்டாய்க் கிடக்கும் குழிகளை இங்கேதச்சனால் வினைசெய்யப்பட்ட விடங்களுக்கு வமிக்கப்பட்டது. (15)

பருமம் வினமாக் கடவித் தெரிமறவர்
ஊக்கி யெடுத்தவ ரவத்தினார்ப் பஞ்சாக்
குஞ்சரக்கும் பத்துப் பாய்வன குன்றிவரும்
வேங்கை யிரும்புலி போன்ற புனனாடன்
வேந்தரை யட்ட களத்து.

(பொ-ரை) நீர்நாட்டையுடைய செங்கட்சோழன் பகைவரைக்கொன்ற போர்க்களத்தில் கல்லணையையுடைய திரண்டகுதிரைகள் ஆராய்ந்த வீரர்களால் நடத்தப்பட்டு வீராவேசங்கொண்டு (போரின்கண்) ணெடுத்த தமது ஆரவாரத்தை அஞ்சாதயானையினது மத்தகத்தில் பாயாநின்ற, (அப்பாய்த்துள்)மலையின்கட்பாய்கின்ற வேங்கைப்பெரும்புலியின்பாய்துளையொத்தன.

(வி-ம்) இங்கே சோழனிடத்துள்ள குதிரை வீரர்களை மிகவும் வீரர்களெனக் குறிப்பிட "ஆராய்ந்த வீரர்களால்" எனவும், சோழனது குதிரைகள் போர்க்களத்தில் பாயும்போது மலையிடத்துப் பாய்கின்ற புலிகளைப் போலப் பாயுமெனவுங் குறிப்பிட்டார். (16)

(தொடர்ச்சியுண்டு)

தமிழுழவன்.

றகர ரகரபேத விளக்கம்.

(73-ம் பக்கத் தொடர்ச்சி.)

உற-பொருந்த,வலிய,பலமுள்ள.
உர-ஞான, ஊக்கமுள்ள, வலிய.
உறப்பல்-உறமானபல்.
உரப்பல்-அதட்டல்.
உறம்-பலம், வலிமை.
உரம்-ஞானம், மதில், மார்பு.
உறல்-சேர்தல், கிட்டல், வருதல், வியங்கோள் வினைமுற்று.
உரல்-அரிசிதீட்டுகிற உரல்.
உறவு-பந்துத்துவம்.
உரவு-ஞானம், ஊக்கம், வன்மை.
உறவுநீர்-உறவினீர்மை.
உரவுநீர்-உப்புநீர்.
உறவோர்-பந்துக்கள்.
உரவோர்-அறிவுடையோர்.
ஊற-நனைய.
ஊர-நகர.
ஊறல் - ஊறுதல், வியங்கோண் முற்று.
ஊரல்-உரிஞ்சல், ஊர்தல், கிளிஞ்சல், நகரல், வியங்கோண்முற்று.
ஏற-மேலேற.
ஏர-அழகிய.
ஏறங்கோட் பறை - முல்லை நிலப் பறை.
ஏரங்கோட்பறை-மிகவழகிய கோட்பறை.
ஏறண்டம் - ஏறிப்போக வேண்டிய அண்டம்.
ஏரண்டம் - ஆமணக்கு, அழகிய அண்டம்.
ஏறம்பு-ஏறிப்போகும் அம்பு.
ஏரம்பு-அழகிய அம்பு.
ஏறல்-ஏறுதல்.
ஏரல்-கிளிஞ்சல்.
கற-கறவென்னேவல்.
கர-கையைச்சேர்ந்த, ஒளி.
குற-குறவர்க்கான.
குர-பசுவின், தருப்பையின், குதிரைக்குளம்பின்.
குறங்கு-தொடை.
குரங்கு-வானரம், விலங்கின்பொது, குரங்கென்னேவல்.
குறத்தி-குறஜாதிப்பெண்.
குரத்தி-தலைவி.
குறம்-குறவர்பாடும்பாட்டு.
குரம்-குதிரைக்குளம்புதருப்பை, பசு.
குறவகம்-குறவன்வீடு.
குரவகம் - மருந்தோன்றி மரம், வாடாக்குறிஞ்சி.
குறவர் - மலைநாட்டார் ஓர் ஜாதியார்.
குரவர்-ஆசிரியர், ஐங்குரவர், அரசன் உபாத்தியாயர், தகப்பன், தேசிகன், மூத்தோன்.
கூற-சொல்ல.
கூர-நிறைய, மிக தயைகூர.
கூறல்-சொல்லுதல், விற்றல்.
கூரல் - புள்ளிறகு, பெண்மயிர், மிகுதல்.
கோற-கொல்ல.
கோர-விரும்ப.
கோறல்-கொல்லல்.
கோரல்-விரும்புதல்.
சிற-மேன்மையடை.
சிர-தலையைச்சேர்ந்த.
சிறத்தல்-மேன்மைப்படுதல்.
சிரத்தல்-அழித்தல், எழுத்தில்லாவோசை.
சீற-கோபிக்க.
சீர-சீருள்ள.

முக்கியகுறிப்புகள்.

பத்திரிகை சிறியதாகலின் விஷயதானம் செய்யும் அன்பர்கள் நீண்ட

விஷயமெழுதாதிருக்க விரும்புகிறோம். இதுமட்டும் சந்தாசெலுத்தாது பத்திரிகைபெற்றும் வாசிக்கும் அன்பர்கள் கவனித்தால் மெத்தநலம். பத்திரிகை நாள்தவணையாக வருவதற்குக் காரணம் பத்திரிகை நேயர்களேயன்றி வெளியிடும் யாமல்லேம், இதைக்கவனிப்பார்களாக. ஆதரணைக் கர்த்தர்கள். தயவு பாலிப்பார்களென பின்னும் கோரப்படுகின்றோர்கள்.

பெங்களூர் சந்தாதார்கள் செலுத்தவேண்டிய தொகையை, அவ்வூர் செய்ன்ட்மேரிஸ் பள்ளிக்கூட உபாத்தியாயர் கனம் C. S. ஞானப்பிரகாசம் பிள்ளையவர்களிடத்தும், கோலார் தங்கவயலிலுள்ள அன்பர்கள் - ஷெயூர் சாம்பியன்ரீவ்ஸ், வாசி மதுவிலக்குச் சங்கத்தினர், கனம் F. C. தம்புசாமிப்பிள்ளை யவர்களிடத்தும் செலுத்திவிட்டு அவர்கள் கைபட ரசீதுபெற்றுக் கொள்ளலாம். மற்றும் பத்திரிகையின் அநுகூலங்களும் அவர்களால் யாவும் நடக்கும்.

ஸ்ரீமான்-பெ, மா, மதுரைப்பிள்ளை, ராய்பஹதூர் அவர்கள்.

பன்னலங் குலவுஞ்சென்னை வேப்பேரியின்னல மெய்த துன்னிய கண்ணியர் சற்குணபுண்ணியர். தமிழ்வளர்க்கும் தாதாவென்னுஞ் சொல்லுக்கிலக்கானவர் புலவர்சூடியபாமாலைத் தாங்கி புயஞ்சிவந்தது போன்று அன்னவர்க்களித்துக்கையுஞ்சிவந்தவர். பத்திரிகாபிமானமும், குலாபிமானமும்அளவிலாது கொண்டவர். தமிழை யாதரித்துவந்த தமிழ்நாட்டு மூன்றரசருக்குப் பதிலாக இவருதித்துள்ளாரென்பது புலவர்கூற்று. நமதுபத்திரிகையின் முக்கிய ஆதரணைக்கர்த்தராயிருந்து செய்துவரும் உபகாரம் பெரிதும்பாராட்டற்பாலதே. இப்பெருமான் நீடூழிவாழ்க கடவுள் தயை புரிவாராக.

இராஜகுமாரரின் சென்னை விஜயம்.

நமதுநாட்டைக்கோன்முறைவழுவாதுநடாத்திய விக்டோரியா மகாராணியாரின் பௌத்திரரும், சக்கிரவர்த்தியாரின் திருமகனுமாகியவேல்ஸ்இளவரசரும், தனதுபத்தினியாரும் இம்மாதம் 25௳ வியாழக்கிழமை காலைசென்னைசேர்வார்கள். கப்பல் புலப்பட்ட 10 விநாடிகளுக்குள் ஒவ்வொன்றாக குண்டுகள் இவ்வூர் கோட்டைமதிற் புறத்திலிருந்து சுடப்படும். காலை 6மணிக்குமுன் புலப்பட்டாலும் 6 மணிக்குத்தான் சுடப்படும். கப்பல் நங்கூரமிட்டதும் இராஜமரியாதைக்காக கோட்டையின் முன்கரையிலுள்ள பாட்டிரியிலிருந்து 7 குண்டுகள் சப்திக்கும், கப்பல் புலப்பட்டதும், நங்கூரம் பாய்ச்சியதும் போர்டாபீசரால் கோட்டையிலுள்ள மெய்ன்கார்டுக்கு உடனே அறிவிக்கப்படும். சென்னைக் கவர்னர் தன் மனைவியாருடன் கவர்ன்மென்ட்டவுசிலிருந்து புறப்பட்டு 7-45க்கு ஆர்பாரில்புதிதாய்க்கட்டப்பட்டிருக்குந்துறைமுகவாராவதி சேர்வார்கள். 7-50க்கு வாராவதியை விட்டுப் புறப்பட்டதும் 17 குண்டுகள் சப்திக்கும். கவர்னருடன் சீவ் ஜஸ்டிசும், சென்னை பிஷப்பும் கவுன்சல் மெம்பர்களும் செல்வார்கள். இளவரசர் கவர்னர் வார்த்தையால் இவர்களைத் தெரிந்து கொள்வார். 8-10க்கு இவர்கள் திரும்பிவாராவதிசேர்வார்கள் 8-25க்கு இளவரசரும் இராணியாரும் பரிவாரங்களும் கப்பல்விட்டிறங்கி 8-30க்கு புதுவாராவதி சேர்ந்ததும் குண்டுகள் சப்திக்கும். இராஜாக்களும், ஆற்காட்டு பிரின்ஸும், கவர்ன்மெண்டாரால் அழைக்கப்பட்ட ஜமீன்தார்களும் வரவேற்புக் கொட்டகையில் கூடுவார்கள். கவர்னரால் இளவர

சருக்கும் சில சன்மானம் செய்வார். கார்போரேஷனல் அட்ரஸ் வாசிக்கப்
பட்ட பின்னர் பீச்ரோட்டிலிருந்து பாரி அண்டுகம்பனி மூலையாகத்திருப்பி,
எஸ்பிளனேய்ட் மார்க்கமாக லாகாலேஜ்மட்டும் சென்று கோட்டை கிளே
வில் ரோட்மார்க்கமாய், வாலாஜா வாராவதியிற்சென்றுகவர்ன்மெண்ட்அவு
ஸ்சேர்வார்கள். 4 குதிரைப் பூட்டிய வண்டியில் முன்னே பட்டாளங்களசெ
ல்லசேர்வார். அவருக்கடுத்தவண்டியில் கவர்னரும் அவர்மனைவியாரும் ஏடி
காங்குகளுடன் செல்வார்கள், 3வது வண்டியில், ஷேப்டெஸ்பரி, கவுண்டட
சும், மேஜர் ஜனரல் பீட்ஸனும் கவர்னரின் பிரைவேட் செக்ரட்டரியும் போ
வார்கள்.

4-ஆவது வண்டியில், லேடி ஈவாடக்கேடல் இளவரசரின் ஏடிகாங்குக
ளும், கவர்னரின் மிலிடேரி செக்ரிடரிகளும் செல்வார்கள். 5-ஆவது வண்டி
யில் ஷேப் டெஸ்பரி எர்லும், மேஜர் ஜெனரல் ஸர் பிரதாப் ஸிங்கும் இளவ
ரசர் கவர்னர் முதலியவர்களின் ஏடிகாங்குகளும் செல்வார்கள். 6-ஆவது
இளவரசரினிரண்டு ஏடிகாங்குகளும், 7-ஆவது ஆனரெபில் டி, கெப்பல்மிஸ்
டர் எப், டக்டேலும், கவர்னரின் சர்ஜனும், ஏடிகாங்கும் 8-ஆவதில் கவர்ன்
மெண்ட் சீவ் செக்ரிடேரியும், பொலிடிகள் ஆபீஸரும் செல்வார்கள். ஊர்வ
லத்தில் முதல் வண்டியில் திருவாங்கூர் மகாராஜாவும் அவர் பரிவாரமும்,
2-ஆவது கொச்சி ராஜாவும் அவர் பரிவாரமும், 3-ஆவது புதுக் கோட்டை
ராஜாவும் பரிவாரமும், 4-ஆவது பங்கனபல்லி நவாப்பும் பரிவாரமும், 5-ஆ
வது சாந்தூர் ராஜா பரிவாரமும், 6-ஆவது சென்னைச் சீவ் ஜஸ்டிஸூம், செ
ன்னை பிஷப்பும், சாப்பிளனும், 7-ஆவது கவுன்ஸில்மெம்பர்களும், 8-ஆவது
ஆற்காடு பிரின்ஸூம் பரிவாரமும், 9, 10, 11-ஆவது வண்டிகளில் ஐக்கோ
ர்ட் ஜட்ஜிகளும், 12-ஆவது மகாராஜா ஸர் ஸ்ரீ ராவ் ஸர். வி. ரங்கராவ் பக
தூரும் (பொப்பிலி இராஜா) 13-ஆவது ஜெயப்பூர் ராஜாவும், 14-ஆவது வே
ங்கடகிரி ரர்ஜாவும் 15-ஆவது விஜயநகரம் ராஜாவும் 16-ஆவது காளஹஸ்தி
ராஜாவும், 17-ஆவது பிட்டாபுரம் ராஜாவும், 18-ஆவது கார்வேட்டி நகரரா
ஜாவும், 19-ஆவது இராமநாதபுர ராஜாவும், 20-ஆவது சென்னை சர்ஜன் ஜெ
னரலும், 21, 22-ஆவது ரெவினியூ போர்டு மெம்பர்களும், 23, 24, 25, 26,
27, 28-ஆவது லெஜிஸ்லேடிவ் கவுன்ஸில் மெம்பர்களும், 29-ஆவது கார்ப்
போரேஷன் பிரஸிடெண்டும், 30-ஆவது சென்னை ஷெரீப்பும் 31-ஆவது
சிரக்கல், வலிய இராஜாவும் 32-ஆவது கள்ளிக்கோட்டை இரள்பாட் ராஜா
வும், 33-ஆவது காடட்ட நாட்டுவலிய ராஜாவும், 34-ஆவது வள்ளுவ நாடு
வலிராஜாவும் 35-ஆவது அட்ட காடா கள்ளி கோட்டை ராஜாவும் 36-ஆவ
து கோலங்கோடு ராஜாவும், 37-ஆவது எட்டியாபுரம் ஜமீன்தாரும் 38-ஆ
வது சிவகங்கா ஜமீன்தாரும் 39-ஆவதுபர்லக்கிமிடிஜமீன்தாரும் 40-ஆவது
மந்தேஸ ஜமீன்தாரும் 41-ஆவது தாரகோட ஜமீன்தாரும் 42-ஆவது புங்க
னூர் ஜமீன்தாரும் 43-ஆவது கங்குந்தி ஜமீன்தாரும் 44-ஆவது ஆரணி ஜா
கீர்தாரும் 45-ஆவது உடையார் பாளையம் ஜமீன்தாரும் 46-ஆவது உய்யூர்
ஜமீன்தாரும் 47-ஆவது தேவக்கோட்டை ஜமீன்தாரும் 48-ஆவது தென்
வள்ளுநர் ஜமீன்தாரும் 49-ஆவது பத்திராசலம் ஜமீன்தாரும் 50-ஆவது குரு
பம் ஜமீன்தாரும் 51-ஆவது ஆளிகுந்திராஜாவும் பிறகு 30-ஆவது லான்ஸர்
பட்டாளம் ஒருபாகமும் செல்வார்கள். கள்ளிக்கோட்டை ஜமீன்தாரும் பா
லகாடு வலிய ராஜாவும் பர்லக்கிமிடி ராஜாவும் வடவல்லூர் ராஜாவும் தாங்
கள் ஊர்வலத்திற்கு வரமுடியா தெனத்தெரிவித்துவிட்டார்கள். இவ்வளவு
வைபங்கள் நிகழ இத்தகைய பெருந்தகையாளர்கள் கூடிநிற்ப நமதூரைச்

சேரும் இளவரசருக்கு இந்தியாவின் நிலைமையைப் பற்றியும், வானத்தை நோக்கி நிற்கும் கிருஷிகளின் நிலைமையைப் பற்றியும், சோற்றுக்குத் திண்டாடும் ஏழைகளைப்பற்றியும் யாவர் எடுத்துரைப்பார்களோ பகவானே அறிவான். கலாசாலை மாணவர்களை காட்ட நிறுத்திவைப்பதுபோல் ஓர்புறத்தில் இவ்வூரிலுள்ள பஞ்சைபனாதிகளையு மோர் பாற்காட்டி வைத்து இளவரசருக்குக்காண்பித்து இனிதாம் ஆளப்போகும் நமது நாட்டார்மீது கருணைபாலிக்கசெய்வது உத்தமத்திலும் உத்தமமாகும்.

கடிதங்கள்.

களவாடப்போய் கொலையுண்டார்கள்:—பிஷாவரில் டிசம்பர்மீ 22உ இரவு சுமார் 1-மணிக்குப் பாலாமணியென்னுங் கிராமத்தில் வலிகானென்னும் குத்துகைகாரன் வீட்டை கொள்ளையிட, தந்தாளியாகிய ஜாபர் என்னும் பழயதிருடன் தன்னுடன் பல திருடர்களைக் கூட்டிவந்து புகுந்தான் வலிதானும் தன்மனையாளும் உயிர்பிழைக்கவேண்டி மேலடுக்கில் ஓடினார்கள். இதைக்கண்ட ஜாபர் மற்றதிருடர்களை நோக்கி "இதோ அவர்கள்மேலடுக்கிலோடினார்கள் உடனே கொல்லுங்கள்" என்றான் இந்தவார்த்தையைக் கேட்ட சதிபதிகள் கூச்சலிட்டுக்கொண்டு இரண்டாமடுக்கில் திருடர் வருமுன் 3-ம் அடுக்குக்கு ஓடினார்கள். கூச்சலிட்டு ஓடியதால் அவ்விருவரையும் கொன்றுவிடுங்கள் என்றுமற்ற திருடருக்கு ஆக்யாபித்தான் ஜாபர். இவர்களிருவரும் மூன்றாமடுக்குக்கு திருடர் வராமுன் தாங்கள் பிழைப்பதரிது என்று தன்வசமிருந்த சாதுண்டு பிஸ்தோலைக் கையிலேந்தி நின்றார். ஜாபரும்மற்ற இரண்டு திருடர்களும் மூன்றா மடுக்கில் ஏறினதும் ஜாபரைச்சுட்டு கீழேதள்ளினார். மற்ற இருவரையும் தனித்தனிசுட்டு அசதியானகாயமாக்கிடவும். ஓடிப்போய் விட்டார்கள். ஓடினவழியெல்லாம் இரத்ததாரையாயிருக்கக்கண்ட போலீசார் கூடியமட்டும் போய்ப்பார்க்க மத்தியில் மலை தோன்றினதினால் வேறு வழியுந் தேடுகின்றார்கள். (பழயதிருடனை உயிருடன் பிடிப்பவர்களுக்கு 2000-ரூபாயும் கொன்று தள்ளுபவர்களுக்கு 1000-ரூபாயும் கொடுப்பதாய் சர்க்காரார் பிரசுரித்திருந்தார்கள். அதுபோலவே இந்த வலிகானுக்கு 1000-ரூபாய் கிடைக்கும். கெடுவான் கேடுநினைப்பான் என்னும் பழமொழிப்படி தன்வினை தன்னைச்சுட்டது.

ஜப்பல்பூர். மு - வடிவேலன் பிஷாவர்.

கனம் பத்திராதிபரவர்களுக்கு—வந்தனம்—ஐயா, தாங்களன்புடனனுப்பிய "காமநிரஞ்சனி" தாசிப்பெண் ப்ரபாவம் என்னும் புத்தகத்தைக் கண்ணுற்று வாசிக்க ஆனந்தக்கடலில் ஆழ்ந்தனம், அதுமுற்றிலுஞ் சிற்றின்ப நூலாகவும் கேவலம் தாசிப்பெண் சரிதையெனசில்லார் எண்ணினாலும், அதுமுற்றும் இலௌகீகஞானநூலென்பதற்கையமில்லை. அதனுட்கருத்தை யுணர்ந்தவர்கட்கும் கற்பனை யலங்கார நவரசமுணரும் நல்லாருக்கும் பெரும்பிரயோஜனத்தை யுண்டுபண்ணு மினியகதை. யான் குறித்த பத்துபேருக்கும் 2—அணா விலையுள்ள அப்புஸ்தகத்தை அனுப்பிவைக்கவும்.

வீராகவலுநாயுடு.

ஓர்சந்தேகம்—பத்திரிகாபிமானிகளுக்கு வந்தனம். வைகறை யென்னும் ஓர்மாதப்பத்திரிகை எமதுபார்வைக்கு வந்தது. மாதப் பத்திரிகைக்கு அப்பெயர் பரித்தியதென்னனமோ? எனஎண்ணி வை+கறை, என்றும், வை-கல்-தை-என்றும், வைகு-அறை-என்றும், வை-கறு-ஐ-என்றும், வை-கல்-து-ஐ-என்றும், வைக்கல்-தை-என்றும், வைக்கு-அறை-என்றும் பிரித்துப்பொருணோக்கில் முற்றும் முரண்பட்டுள்ளது. உணர்ந்தோர் பதிலெழுத வேண்டுகின்றனன்.

(அருட்கவி நாவலன்)